குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு

20] சார்வரி ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10—12—60 [இதழ் 1

ஆசிரியர் :
வித்துவான்,
சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணை ஆசிரியர் :
வித்துவான்,
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

சித்ரலேகா

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் வெளியீடு

மலர் 20] 10-12-60 [இதழ் 1

உட்பொருள்

1 குருநாதர் அருளாசி ... 1
2 ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் வாழ்த்து ... 3
3 நல்லிதழ் வாழி! வாழி! ... 4
4 இருபதாவது ஆண்டு தொடக்கம் ... 5
5 வெள்ளத்தால் அவதியுற்றோர்க்கு உதவி... 13
6 இருபதாம் ஆண்டில் நாம் ... 14
7 சிவ ஞான போதம் ... 20
8 ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசி ... 23
9 சைவ சித்தாந்தம் ... 25
10 அன்பின் வெற்றி ... 30
11 விக்ரக ஆராதனை ... 35
12 மனைத்தக்கமாண்புடைமை...
13 சவுந்தரியந்தாதி ...
14 கழிந்த இளமை ...
15 வினைச்சோற்றிறம் ... 5
16 தருமையாதீன வெளியீடுகள் 49
17 உடல்வளர்க்கும் மூலிகைகள் 54
18 செய்திகள் ... 57
19 எதிர்காலம் ... 62
20 Sri Kailai Subrahmanya Desika Swamigal High School Endowment at Tirupanandal ... 65

ஆண்டுக் கட்டணம் 1—1—61 முதல்

உள்நாடு	வெளிநாடு
2-25	3-00

உ

சிவமயம்

"ஞானசம்பந்தம்"

இருபதாவது மலர்ப் பன்னிரண்டு இதழ்களின்

பொருளடக்கம்

எண்		பக்க எண்
1	அம்பலவன் பழுவூர்நக்கன்	93
2	அருள்நந்தி சிவாச்சாரிய சுவாமிகள் வரலாறு	635
3	அன்பின் வெற்றி	30
4	அல்லியின் கண்ணீர்	237
5	அவன் செயல்	295
6	ஆவணிமூலத் திருநாள்	610
7	ஆடைக் கலை	631
8	இருபதாம் ஆண்டில் நாம்	14
9	இலக்கியமும் ஆராய்ச்சியும்	479, 523
10	இராமகண்டரும் சீகண்டரும்	658, 711
11	இறைவனுள்ளத்து உயிரோவியம்	729
12	உடல் வளர்க்கும் மூலிகைகள்	54, 111, 164, 233, 287, 349, 398, 474
13	உலகம் உணருமா ?	435
14	உலக அரங்கில் தமிழ்	176
15	எதிர்காலம்	62, 133, 197, 243, 307, 367, 431, 496, 559, 623, 686, 750
16	கழிந்த இளமை	42
17	கடாரங்கொண்டானில் திருப்பணித் தொடக்கம்	137
18	கனகாபிடேகம்	201

ஓ2ஞ்சு211,N41
31K6

எண்		பக்க எண்
19	கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப்பள்ளிக் கால்கோள் விழா	178
20	கயிலைக் குருமணியின் அருளுரை	213, 264, 319
21	கயிலைக் குருமணி அவர்களின் ஆசியுரை	566
22	கயிலைக் குருமகாசந்நிதானத்திற்கு அளித்த வரவேற்பு	147, 220, 451
23	கந்தன் கருணை	690
24	கம்பராமாயணத்தில் பாடவேறுபாடுகள்	507, 592
25	கம்பரும் காளிதாசரும்	733
26	காசிவாசி சுவாமிகள் அவர்களின் தொடக்க உரை	327
27	குரு வழிபாடு	315
28	சங்கராசாரிய சுவாமிகள் அவர்களின் பொன்மொழி	217
29	சவுந்தரியந்தாதி	230, 301, 344
30	சங்கற்ப நிராகரணம்	402, 462
31	சமயமும் கலைகளும்	627
32	சிலம்பில் வாழ்வியல்	582
33	சிவஞான போதம்	77, 142, 209, 282, 321, 387, 437, 502, 576
34	சிவசைலப் பள்ளு	725
35	சுயமதிப்பு	118
36	சுப்பராயன் அவர்கள் ஆற்றிய பாராட்டுரை	277
37	செய்திகள்	57, 121, 181, 239, 303, 358, 419, 493, 547, 613, 679, 739
38	செந்தமிழ்ச் செல்வரின் சிறப்புக் கவிதை	574
39	சென்னை கவர்னர் பேச்சு	81
40	சென்னை மாநில ஆளுநர் அவர்களுக்கு அளித்த வரவேற்புரை	175
41	சைவ சித்தாந்தம்	25
42	ஞானசம்பந்தம் இருபதாவது ஆண்டு தொடக்கம்	5
43	ஞானசம்பந்தம் வாழ்த்து	141

எண்		பக்க எண்
44	ஞானப்பிரகாச மாலை	490, 527
45	ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவப் பத்திரிகை	311
46	தருமையாதீனத்தில் சென்னை மாநில ஆளுநர் அவர்கள் ஆற்றிய பேருரைச் சுருக்கம்	24
47	தருமையாதீன வெளியீடுகள்	49, 115, 667
48	தருமையில் கனகாபிஷேகம்	251
49	தருமை காட்டும் திருநெறி	371
50	தாமரைத் தவிசு	168
51	தாயுமானுர்	415, 466
52	திருவருள் வாய்ப்பு	247
53	திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு	406
54	திருக்களிற்றுப்படியார்	443, 515, 599
55	திருவிசைப்பா	447, 519
56	திருக்கேதார யாத்திரை	531
57	திருவுந்தியார்	606, 647
58	திருநாவுக்கரசரின் திருவுள்ளம்	698
59	தில்லியில் அருளிய உபதேசம்	499
60	தில்லிக் கடிதம்	545
61	தெளிவந்த தேறல்	291
62	தெய்வத் தமிழ் மாட்சி	563
63	நடுநாட்டிற் சில தலங்கள்	483
64	நவராத்திரி விளக்கம்	630
65	நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தம்	673
66	பல்கலைச் செல்வரின் மணிவிழா	76
67	பழந்தமிழகத்துத் திருவிழாக்கள்	104, 153
68	பதினென்ரும் பரிபாடல்	353, 395
69	படை வீடுகள்	657
70	பாவைநெறியால் பயன் விளைந்தது	73
71	பாமலர்	87
72.	பாராட்டுரைகள்	333 374

எண்		பக்க எண்
73	புறத்தில் கூன்	643
74	புள்ளிருக்குவேளூர்த் தல விளக்கம்	693
75	பைந்தமிழ்ச் செம்மல் அவர்களின் சொற்பொழிவு	571
76	பொதியிலும் கயிலையும்	720
77	மனக்கோயில்	99, 160, 226, 297, 341
78	மனத்தக்க மாண்புடைமை	37, 108, 157
79	மன எழில் வேண்டும்	326, 394
80	மனமாட்சி	663, 706
81	மதிப்புரை	200, 393, 401, 489
82	மருதநாட்டு மங்கை	469, 511, 588, 653, 702
83	மறதிக்கு மன்னன்	596
84	வரவேற்புரை	330
85	வட திருமுல்லைவாயில் திருப்பதிகம்	632
86	விக்ரக ஆராதனை	35
87	வினைச்சொற்றிறம்	45, 89, 172
88	விழாக் குழுவினர் வாசித் தளித்த போற்றியுரை	281
89	வெள்ளத்தால் அவதியுற்றோர்க்கு உதவி	13
90	Sri Kailai Subrahmaniya Desika Swamigal High School Endowment at Tirupanandal	65



உ

குருபாதம்

தருமபுர ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
10—12—60

'ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே'

"ஞானசம்பந்தம்"

புதிய ஆண்டு அருளாசி

ஞானசம்பந்தத்திற்கு இருபதாம் வயது தொடங்குகிறது. சிவமணம் பரப்பும் இச் செந்தமிழ் நறுமலர் தருமையாதீன மென்னும் ஞானத் தடாகத்தில் மாதம் ஒரு முறை பூத்து மலர்ந்து வருகிறது. இந் நறுமலரின் நன்மணம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சமயத்துறை நிற்குமிடமெல்லாம் சென்று உணர்வூட்டிப் புதிய உற்சாகம் தந்து விளங்குகிறது. ஆதி பரமாசாரியப் பெருமானுர் திருப்பெயர்க்குள்ள அருள் மாட்சி இது

உலகில் நாமும் வாழ்கின்றோம்; பிற உயிர்களும் வாழ்கின்றன. இந்த வாழ்க்கையும் நாமாகப் படைத்துக் கொண்டதா? நாம் நினைக்கின்றோம்; இந்த நினைப்பும்

நாமாக உண்டாக்கிக் கோண்டதா? நாள்தோறும் பேசுகிறோம்; இந்தப் பேச்சும் நாமாகப் பேசுவதா? மேம்போக்காகப் பார்த்தால் 'ஆம்' என்று சோல்லத் தோன்றும். சிந்தித்துப் பாருங்கள்; உள்ளிருக்கும் ஒருவன் தூண்டாவிட்டால் இந்த வாழ்க்கை, நினைப்பு, பேச்சு, சேயல் ஏதாவது ஒன்றின் சிறு கூறுவது நிகழுமா? நிகழாது. இந்த உண்மை தேரிகிறவரை 'நாம் சேய்தோம், நாம் சேய்தோம்' என்ற முனைப்பு இருக்கும்.

ஞானசம்பந்தம் இந்தப் பத்தோன்பது ஆண்டு களிற் பல கருத்துக்களைக் கூறி வந்திருக்கிறது, இனியும் கருத்துக்களைத் தேளிவுற என்றேன்றும் தேளிவாகப் பலமுறையில் வேளியிட்டு நீடுவாழும். இக்கருத்துக்கள் அனைத்தும் இறைவன் அருட் கோடைகள்; நம் கருத்துக்கள் என்று நினைத்தால் அது தவறு; சிவபோகசாரம் பேசுகிறது:- 'நன்கருத்தே தேன்கமலை ஞானப்ரகாசனே, என் கருத்தே உன் கருத்தேன் றேண்ணுமல் - உன் கருத்தே, என் கருத் தேன் றேண்ணியே யான்பட்ட துன்பமேல்லாம், உன் கருத்தே தீரவறியும்'

எல்லாம் அவன் சேயல். "ஞானசம்பந்தத்தின்" புத்தாண்டுத் தோடக்கத்தில் இந்நன்னினைப்புக்கு ஆற்றுப்படுத்தி இதன் பணிகள் நீடு வாழ்கவேன்று சேந்தமிழ்ச்சோக்கர் சேவடி சிந்திக்கின்றோம்.

தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையுங் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மோழிபத்தும் இவைவல்லார்
போன்னடைந்தார் போகங்கள் பலஅடைந்தார் புண்ணியரே

திருச்சிற்றம்பலம்.

1531

உ
செந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
நந்தந்தித் தம்பிரான் அவர்கள்
திருப்பனந்தாள் (தஞ்சாவூர் ஜில்லா)

தேதி : 6 டிசம்பர் 1960

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

கயிலைமலையானே போற்றி போற்றி

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவரும்

"ஞானசம்பந்தம்"

என்னும் திங்களிதழ் தமிழ்நாடுமட்டிலும் அன்றிக் கடல் கடந்த நாடுகளிலும் 19 ஆண்டுகளாகப் பழுத்த தமிழுடன் திருப்பெருகு சிவஞானத்தைப் பரப்பி வருதல் உலகறிந்த உண்மை.

ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்களின்

அருளாசியால் நடத்தப்பேறும் இப்பத்திரிகையின் 20வது ஆண்டுத் தோடக்க மலருக்கு வாழ்த்துரை வழங்குவது மிகையாகும். எனினும் 'வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்' என்று அமைவதே பொருத்தமாகும். ஞானசம்பந்தம் ஆகிய இத்திங்களிதழ் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்களின் அருளாசியால் நின்று நிலவுவதாகுக.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

சிவ சிவ
6—12—60

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

உ

குருபாதம்

" நல்லிதழ் வாழி! வாழி!"

" வேலன் "

ஞானநன் மணமே கூடி
ஞாலமுற் றினிது வாழ
ஊனெலா முணர்வு போங்க
உள்ளொளி கிளர்ந்தே யோங்க
மோனமா நெறியும் இன்ப
முத்தமிழ் நெறியும் பேணும்
" ஞானசம் பந்த " மென்னும்
நல்லிதழ் வாழி ! வாழி !

இன்சுவைக் கவிதை யாலும்
இயலுநற் றுறைகளாலும்
நன்சுவைச் சமய ஞான
நல்விளக் கங்க ளாலும்,
துன்னிடும் பாலுந் தேனும்
துளைந்தது போற்சு வைக்கத்
தன்சுவை பெருகி மேலும்
தழைத்திவண் வாழி ! வாழி !

உ
வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 } சார்வரி - கார்த்திகை 10—12—60 { இதழ் 1

O2,3m2H,N41
31K6

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

"ஞானசம்பந்தம்"

இருபதாவது ஆண்டு தொடக்கம்

" உள்ள மலநீங்கி ஓங்கு சிவானந்த
வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதலே—கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்தின்
சித்தாந்த முத்தியெனத் தேறு" — முத்திநிச்சயம்

உயிர்களுள் மக்களுயிரே சாலச்சிறந்தது என்று முன்னோர் முடிவு செய்தனர். எண்ணரிய பிறவிகளுள் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது. அதில் ஐயம் இல்லை.

"ஆறு சுவையோ டருந்துதல் நுண்பஞ் சணைதுயிறல்
கூறு கரண விதங்களின் மாதரைக் கூடிடுதல்
தேறி விசாரத்தி னுன்அச்சம் நீங்குதல் தேறின்மண்மேல்
வேறும் உயிர்கள் தமக்கின்மை யால்நரர் மேல்என்பவே"

என்று 'அருட் பிரகாசம்' என்னும் ஒரு நூல் அறிவிக்கின்றது.

அத்தகைய சிறந்த மக்களது ஆசாரம், அவர்களைப் பகுத்துணரவைக்கின்றது. ஆசாரம் பல வேறு வகைப்படும். ஆசாரமே இல்லாத மக்களும் எண்ணிலராயுளர். குலாசாரமே இல்லாதவர் அன்னவர். குலாசாரம மட்டும் உடையவர் ஒரு திறத்தார், அது சிறந்துள்ளதாயின் அவரும் சிறந்தவர். குலாசாரத்தோடு சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் திறத்துள் ஒன்றும் பலவும் கூடியிருப்பின் அது சாலச் சிறந்தது. சரியாசாரம் மட்டும் உடையோர் குலத்தின் மேம்பாட்டுடன் சமயப்பிரவேசமும் உடையவர் ஆவர். சமயதீட்சை பெற்றவராயிருப்பர் அவர். விசேட தீட்சை பெற்றுக் கிரியாசாரம் உடையவர் அவரினும் மிகச் சிறந்தவர். யோகாசாரம் உடையவர் அவரினும் மிக உயர்ந்தவர். அவருள் 'ஒளிசேர் நெறி' யை உணர்ந்தவராயின், சைவ சித்தாந்த ஞானசாரத்திற்குரிய யோக்கியம் உற்றவராவார்.

சைவத்தில் 'சமயாசாரம்' 'சந்தானசாரம்' என்று இருவகை ஆசாரம் உண்டு, அவற்றுள் தீட்சைக் கிரமங்களையுணர்ந்து அவற்றைச் செய்வகை அறிந்து செய்தலும் செய்வித்தலும் அவற்றைப் பெறுதலும் பெறுவித்தலும் சமயாசாரமே ஆகும். 'சந்தானசாரம்' சமயாசாரத்தைத் தவிராதும் தவருதும்கோண்டு உபதேசக்ரமத்திலே குருசீட பரம்பரையாக நிகழ்வது, அங்கிகழ்ச்சிக்கேல்லாம் பல பிறவியிற் செய்த தவத்தின் பயனுகப் பலவேறு சம்பந்தங்களின் நீங்கிச் சிவஞானத்தோடு சம்பந்தம் அடைய வேண்டும், அதுவே 'ஞானசம்பந்தம்' எனப் போற்றப் படுகின்றது. 'திருஞானசம்பந்தம்' என்னும் திருப்பெயர் இங்கு உணரத்தக்கது.

' யாவருக்கும் தந்தையாய் எனும் இவர்இப் படியளித்தார்
ஆவதனுல் ஆளுடைய பிள்ளையா ராய் அகில
தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருளாகும்
தாவில் தனிச் சிவஞான சம்பந்தர் ஆயினுர் ''

எனத் திருத்தொண்டர் புராணம் 'ஞானசம்பந்தம்' ஆளுடைய பிள்ளையார்க்கு உற்ற உண்மையை விளக்கிற்று. அச்சிவஞானம் அகிலதேவருக்கும் முனிவருக்கும் தெரிய அரிய பொருள் என்றும், அழிவில்லாதது என்றும், ஏனைய சமயஞானங்களின் வேருய தனி ஞானம் என்றும், அதனது சம்பந்தரானுர் ஆளுடைய பிள்ளையார் என்றும், அதற்குக் காரணம் உலகுக்கெல்லாம் அம்மையப்பர் ஆகிய தோணியப்பர் தண்ணளியே என்றும் சேக்கிழார் பெருமான் நம் பாக்கியப் பயனுக அளித்தவுண்மைகளை இங்கு நாம் நினைவு கூர்தல்வேண்டும். அதனை மேலும் அப்பெருமானுர் விளக்கியிருப்பதையும் அறிதல் நன்ருகும்,

'' சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில் ''

இத்திருப்பாடலில் நான்கு ஞானம் உள்ளதுபோலத் தோன்றும் பலர்க்கும். அறிவுடைய சிலர்க்கு இரண்டே ஞானம் இதிற் கூறப்பட்டதேன்பது இனிது விளங்கும். இதனை

'' உயர் ஞானம் இரண்டாம் ; மாரு
மலம் அகல அகலாது மன்னுபோதத்
திருவருள் ஒன்று ; ஒன்று அதனைத் தெளிய ஓதும்
சிவாகமம் என்றுலகறியச் செப்பும் நூலே ''

என்று சிவப்பிரகாசத்தில் உமாபதிதேவ நாயனுர் அருளியதால் உணர்க.

மூவர் முதலிகள், காரைக்காலம்மையார் முதலானோர்க்கு உண்டாகிய ஞானம் திருவருள் (ஞானம்).

திருநந்திதேவநாயனுர் முதலிய சந்தானகுரவர்க்கு உண்டாகியது சிவாகமவழிச்சிவஞானம். மாணிக்கவாசகர்க்கும் இஃதே. அதனுற்றுன் 'மூவர் முதலிகள்' வேறு மாணிக்கவாசகர் வேறு எனக்கோண்டு முன்னேர் போற்றினர், மூவர் முதலிகள் 'தோடுகூற்றுப் பித்தா மூன்றும் பீடுடைத் தேசிகன் பேரருள்' பேற்றவர்கள். மாணிக்கவாசகரோ சந்தாஞசாரத்தில் குருருபத்தில் எழுந்தருளிய சிவன் தண்ணருளால் சிவஞானம் உபதேசிக்கப்பேற்றவர். அவ்வாறு இல்லை மூவர் முதலிகட்கு, 'சைவத் தலையாய மூவர் திருவாதவூரர்' என்றது 'அருட்பிரகாசம்' என்னும் அருள் நூல் (கோலை மறுத்தல் 16, உரை).

'' பண்டைநற் றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்திபண்ணுந்
தோண்டரைத் தானே தூய கதியினில் தோகுப்பன் ''

என்றது மூவர் முதலிகளுக்கும் அவரன்னேர்க்கும் எய்தும் வண்ணம். "மார்க்கர் கண்ட நூல் ஓதி வீடுகாதலிப்பவர்கட்கு ஈசன்புண்டரீகத்தாள் சேரும் பரிசினைப்புகலலுற்றும்" என்றது பிறர்க்கு எய்தும் வண்ணம். 'கதிப்பாற்சேல்ல ஏது நேறி எனும் அவர்கட்கு அறிய முன்னுள் இறைவன் அருணந்தி தனக்கு இயம்ப நந்தி கோதில் அருட்சனற்குமாரற்குக் கூறக் குவலயத்தின் அவ்வழி எம் குருநாதன் கோண்டு தீதகல எமக்களித்த ஞான நூல்' என்றது சிவஞானசித்தி.

'சேங்கை மீது போருத்தம் உறும் புத்தகம் ஏது ஐயா என்னப் போய்மையிலாச் சிவஞானபோதம் என்றுர்' 'என்றலுமே சிவம் ஏது? ஞானம் ஏது? இங்கு இலங்கியிடும் போதம் ஏது? இயம்புவீரேல் அன்று வடநீழலில் வந்திருந்தார் நீரே அடியேனும் உமக்கு அடிமை ஆவேன் என்ன, நின்ற சிவம் ஒன்று; அதனைத் தேர்தல் ஞானம்: நிகழ்போதம் தேர்ந்ததனைத் தேளியலாம் என்று ஒன்றிய நற்போருள் வினவி நிற்பார் (ஆகிய மாணிக்கவாசகர்) சிந்தை உருகும் வகை உரைசெய்தார் உவமையில்லார்' என்று திருவாதவூரடிகள் புராணம் பாடிற்று, இவற்றுல்

'சிவஞானபோதம்' திருக்கயிலை நூல் என்று தானே தோன்றும்? அதனாலும் தமிழ்ச் சிவஞானபோதம் மொழி பெயர்ப்பு என்று கொண்டனர் போலும் பின்னோர்.

"பைங்குருந்தடியில் யோகவாசனத்தில், புத்தகத்து எழுதிய சிவஞான மெய்ப்போதம், கைத்தலம் தரித்திருப்ப தோர் கருணையைக் கண்டார்." (41) "மன்றுளாடிய ஆனந்தவடிவமும் வடவால், ஒன்றி நால்வருக்கு அசைவற உணர்த்திய உருவும், இன்று நாயினேற்கு எளிவந்த இவ் வுரு என்ன, அன்று நாயகன் குறிப்பு உளத்து உணர்த்திட அறிந்தார்" (42) என்று பரஞ்சோதி முனிவரும் அதையே விளக்கினார். இவற்றால் மாணிக்கவாசகர் சந்தானசாரத்தின் வழியே குருவருள் பெற்றவர் என்பது தெளிவாயிற்று. மூவர் முதலிகள் சமயாசாரத்தின் வழியே குருவருள் பெற்ற திருவருட் செல்வர்கள் என்பது அகத்தியர் தேவாரத் திரட்டாலும் அறியக் கிடக்கின்றது.

சேக்கிழார் பெருமான் திருவாக்கில் வந்த இரண்டு ஞானமும் தணிகைப் புராணத்தில், 'தோற்றம் மரணம் கெட இன்பத்துறையுள் அழுத்தும் அருள் இரண்டு' என்றும் 'பொருவில் பரம் அபரம் எனப் புகல் ஞானம் இரண்டு' என்றும் கூறப்பட்டுள்ளன. அன்றியும், அதில் அவையே,

"மேவரும் ஞானம் இரண்டு ; அவற்றுள் ஒன்று
விமலனார் பாததா மரையே
ஓவறும் அன்பின் உணர்திரு அளிக்கும்
ஒப்பிலா உயர்கலை ஞானம்
தாவரும் பவத்தை வேரொடும் களையும்
தக்கமெய்ஞ் ஞானம் ஒன்று. இவற்றால்
சாவதும் பிறப்பும் தணப்புறச் சிவத்தைச்
சார்ந்ததுவாய் நிற்றல் யோகம்"

என்று விளக்கவும் பட்டன. இதிற் கூறியது சிவஞான போதத்திற் பத்தாவது சூத்திரத்திற் போதிக்கும் சிவயோகம். எட்டாவது சூத்திரத்திற் போதிக்கும் யோகம் அன்று இது.

'அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி' நிற்றலையே இதில் 'அதுவாய் நிற்றல் யோகம் என்று அருளினார் கச்சியப்ப முனிவர்.

இவ்விரண்டு ஞானத்தோடும் உறும் சம்பந்தமே 'ஞானசம்பந்தம்' எனப்படும். 'அபர ஞானசம்பந்தம்' 'பரஞானசம்பந்தம்' என்னும் இருதிறத்துள் சிவாகம ஞானம் அபரஞானம். அதைப் பெற்றார் அபரஞானசம்பந்தர். பரஞானம் ஆகிய திருவருள் பெற்றார் பரஞானசம்பந்தர். திருஞானசம்பந்தர் முதலோர்க்கு நேரே பரஞானசம்பந்தம் எய்திற்று. எல்லோர்க்கும் அவ்வகையில் எய்துவது அரிது. அபரஞானம் ஆகிய சிவாகம ஞானம் பெற்று அதன் வழியே பரஞானம் பெறுவதே அரிதாயிருக்க, அரியதினும் அரிய பரஞானத்தை நேரே பெற முயல்வது அறிவாகாது. 'தாவில் தனித் திருஞானம்' என்றதே பரஞானம்.

சிவாகம ஞானத்தையும் ஒழுங்காகப்பெற முயலாமல் பெற்றதுபோல் ஏய்க்கும் நிலைமை ஒரு நாட்டில் உலவிச் சமயவரம்பெல்லாம் கெடுத்து வருகின்றது. இதற்குச் சிவனருள் யாது செய்யும் என்று அறியாமையே காரணம், இதற்கும் ஞானத்திற்கும் ஒரு சிறிதும் சம்பந்தம் இல்லை.

> "வீடுஞானத்தன்றி மேவொணாது ஆகையால்
> கூடுவோன் அந்தவாழ் வுந்தீபற
> கோதில்மெய்ஞ் ஞானி என்றுந்தீபற"

என்னும் அவிரோதவுந்தியாரையும், "முத்திசாதனம் ஆகிய சரியாதி நான்கனுள் ஞானம் ஒன்றுமே பரமுத்திசாதனம் ஆம். மற்றை மூன்றும் ஞானத்திற்குச் சாதனம் அன்றிப் பரமுத்திக்குச் சாதனம் ஆகாமையால், அந்த முத்தியாகிய பேரானந்த வாழ்வைக் கூடுமவன் குற்றம் (ஐயந்திரிபு) அற்ற மெய்யுணர்வை யுடையோனே. மற்றையார் அல்லர்." என்னும் அதன் உரையையும் ஈண்டு உணர்தல்வேண்டும். இதனை இங்குக் காட்டியது எவ்வாற்றாலும் அவிரோதமே.

'ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம் நல்ல ஆகமம் சொல்ல' உணர்ந்தும் ஞானத்தைப்பெறாது வாணாளை வீணாகக் கழிப்பது நன்றாகாது. திருமந்திரத்தில்,

" ஞானத்தின் மிக்க தவநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் *மிக்கவை நன்முத்தி நல்காவால்
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே "

என்று உள்ளதையும் அறிந்துகொள்ளல் நன்றாகும். (*மிக்கவை வேறுபட்டவை என்னும் கருத்துடையது.) ஞானத்தின் மேலானவை இல்லை.

" ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்
பெருகுதவம் சித்தியெலாம் பெற்றும் — குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்தசலனமாந் தினம் "

என்றது சிவபோகசாரம், சரியை கிரியா போகங்களைச் செய்துழி நன்னெறி ஆகிய ஞானத்தைக் காட்டி அல்லது மோட்சத்தைக் கோடா என்பது மெய்கண்டார் திருவாக்கு.

அத் தகைய மேலான சிவஞானத்தைப் பெறச் சைவ நூல்கள் பலதுணையாயிருந்தும் அவற்றைக் கற்பதும் கேட்பதும் இக்காலத்தில் குறைந்தன. 'சித்தாந்தம்' 'சைவம்' முதலிய திங்கள் வெளியீடுகள், ஞானம் குறைந்த காலத்தில் பெருகிய நலம் விளைத்தன. அவற்றின் பின்னர், தருமை யாதீனத் திங்கள் வெளியீடாகிய இஞ் 'ஞானசம்பந்தம்' தோன்றிப் பத்தோன்பதாண்டுகளாகத் தொண்டாற்றி விளங்குகின்றது. இஃது இருபதாவது யாண்டின் தொடக்கம்,

ஆதீனத்தில்

சென்னை மாநில ஆளுநர் நல்வரவு

இம் முதல் இதழ் சிறந்த ஒரு வாய்ப்புடன் வெளி வருகின்றது. வடநாட்டுத் திருவாளர்; தென்னாட்டை ஆளுநர்; அந்நாட்டார்க்குத் தனிச்சிறப்புடைய தெய்வ பத்தி முறையிற் சிறிதும் குறையாத சீலர்; நல்ல எண்ணமே உடையவர்; எண்ணிய நன்மைகளையே பேசிவரும் பெரியவர்; பேச்சிற்கும் செயலுக்கும் ஒற்றுமையுள்ளவர்.

அவர் பெயரை அறியாதார் எவரும் இரார். மேன்மை தங்கிய விஷ்ணுராம்மேதி அவர்கள் 25—11—60 வெள்ளிக் கிழமை மாலையில் இத் தருமையாதீனத்திற்கு வந்ததும், ஆதீனம் மிகச் சிறந்த முறையில் அவர்வரவை ஏற்றதும், அவர் சம்பிரதாயத்தின்படி ஒழுகிய சிறப்பும், அவர் வெற்றிமடந்தையும் திருமடந்தையும் ஆகக்காட்சி வழங்கும் ஸ்ரீ மகாலட்சுமிதுர்க்காம்பிகையின் திருவருள் கிடைக்கப் பெற்றுப் பேருவகை எய்தியதும், திருநேறிய தமிழ் மன்றத்தில் இனிதிருந்து மக்கட்கு நல்ல அறிவுரை வழங்கியதும், இம்மடாலயத்தின் சிறப்பை நன்கறியப் பலர்க்கு வாய்த்ததும் நேரில் அறிந்தவர்க்கே விளங்கலாவன. இவற்றையெல்லாம் நன்கறிந்த நல்ல சைவன் நம்மை ஆளும் சந்திர சேகரமூர்த்தியே சைவத்திற்குச் சந்திரசேகர மூர்த்தியும் வைணவத்திற்கு விஷ்ணுராம்மேதியும் ஒருங்கு வந்து இந்த ஆதீனத்தின் 'ஞானசம்பந்தம்' பலர்க்கு விளங்கச் செய்தனர். இதுவே இருபதாவது யாண்டின் தோடக்கத்திற்கு இம்முதல் இதழ்க்கு உற்ற நல்லதோரு துணையாகும். ஆதலின், இனி இந்நாட்டில், இத்திங்கள் வேளியீடு முன்னைய அளவினும் பெருகிப் பரவிப் பலர்க்கு '**ஞானசம்பந்தம்**' உண்டாக்கி வளர்த்துவரும் என்பதில் ஐயமே இல்லை.

'**ஞானசம்பந்தம்**' உண்மையிலே சிவஞானத்தோடு சம்பந்தம் எய்துவிக்கும் அறிவை வளர்த்துவரும். அத்தகு கட்டுரைகள் தோடர்ந்து வருகின்ற உண்மை, இதைத் தவறுமற் கற்றுவரும் அன்பர்களுக்கு விளங்கும். பலர் இதன் சிறப்பை உண்மையாக உணர்ந்து எழுதுகின்றனர். அவை, இனித் திங்கள் தோறும் ஒவ்வோன்ருக இதில் வேளிவரும்.

'நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க'

குருஞானசம்பந்தர் திருவடி வாழ்க

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் வாழ்க

வளர்க ஞானசம்பந்தம்

திருக்கேதார யாத்திரை ஆதீன வெளியீடாக வந்தது. அதனை எல்லோரும் - வெளியீடு கிடைக்காதவரும் படித்து இன்புறும் பொருட்டுத் திங்கள்தோறும் ஒவ்வொரு பகுதியாக வெளியிட்டு நம் பத்திரிகை யாத்திரை நூல்தொண்டும் புரிந்திருக்கிறது என்பது இங்கே குறிப்பிடத் தகுந்தது.

அன்றியும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அவ்வப்போது புரிந்து வரும் யாத்திரைகளை இலக்கிய முறையில் கட்டுரைகளாக்கித் தரும் சீரிய பணியையும் நம் பத்திரிகை மேற் கொண்டுள்ளமையைப் பாராட்டி அன்பர்கள் பலரும் அவ்வப் போது நம் காரியாலயத்துக்கு எழுதியுள்ளமை இங்கே அறியத் தக்கதாகும்.

சைவ சித்தாந்த சங்கிரகம், திருக்கோவையார், சிவபூஜா தத்துவம், நோன்பு விளக்கம், தத்துவ விளக்கம், திருநெறி விளக்கம், கந்தரலங்காரப் பொருட்சிறப்பு, திருத்தொண்டர் புராண மந்திரங்கள், இருளும் ஒளியும், உருத்திராக்கப் பெருமை, திருநீற்றுப் பெருமை என்பன முதலிய தலைப்புக்களில் பல இதழ்களில் நமது சமய நுண் பொருள்கள் விளக்கப் பெற் றுள்ளன. தத்துவம் தெரியாமல் விழாக்களைக் கொண்டாடி வந்த தமிழ் நாட்டு ஆடவரும் பெண்டிரும் பொருள் உணர்ந்து நோன்பு நோற்கவும், விழாக்களைக்கொண்டாடவும் முற்பட்டனர்.

கல்வெட்டுத் துறையிற் சிறந்த பல அறிஞர்கள் அவ்வப் போது தாம் கண்டுணர்ந்த பேருண்மைகளை விளக்க அறி வுலகத்தின் மதிப்பைப் பெற்ற நம் பத்திரிகையைத் துணைக் கொண்டுள்ளார்கள். ஆதீன தேவஸ்தானங்களேயன்றி ஏனைய திருக்கோவிற் கல்வெட்டுக்களும் தக்கபல ஆராய்ச்சிக் குறிப்புக் களோடு ஆராய்ந்து வெளிப் படுத்தப் பெற்றன. திருக்கடவூர், திருக்குறுக்கை, சிதம்பரம், திருவையாறு முதலிய சரித்திரப் புகழ் பெற்ற திருக்கோயிற் கல்வெட்டுக்களைப் பற்றிய தெளிவு மிக்க பல புதுங் பொருள்கள் வரலாற்றுலகில் ஒரு பரபரப்பை விளைத்தன. ஆராய்ச்சி உலகில் இக்குறிப்புக்களால் விளைந்த பலன்களைப் பலரும் நன்கறிவர்.

குமரகுருபரர் கவிச் சித்திரமும், கந்த புராணக் கவிச் சித்திரமும் இவ்வாதீனப் புலவர். திருவாவடுதுறையாதீன மகா வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களால்

வரையப்பட்ட இனிய பகுதிகள் கவிதைகளை எளிய நடையில் இவர்கள் விளக்கவும், அதற்கேற்ற எழிலோவியத்தை ஓவியர் ஒருவர் அமைக்கவும் இந்தத்துறை பத்திரிகைச் சிறப்பில் மிக்கதெனப் பல்லோரானும் பாராட்டப் பெற்றது.

சித்தாந்த சாத்திர நுண்பொருள் காண்பதில் தமிழ் நாட்டிற் சிறந்தோரும் நம் ஆதீனப் புலவர்களுமான திரு. முத்து.சு. மாணிக்கவாசகமுதலியார். க. வச்சிரவேல்முதலியார், அருணைவடிவேல் முதலியார்; எழுதியவும் சிவக்கவிமணி சம்பந்தசரணலயர் (சி. கே. சுப்பிரமணிய முதலியார்) முதலி யோர் எழுதியவும் ஆன கட்டுரைகளை இவ்விதழ் திங்கள் தோறும் வெளியிட்டு வருகிறது

சைவச் சார்பான ஆங்கிலக் கட்டுரைகள் பலவற்றையும் ஏற்று அறிவுலகினர் அனைவர் பாராட்டையும் பெற நம் இதழ் தவறவில்லை. ஆங்கிலவரும் நம் இதழ்ச் செய்தியால் நம் கருத்துக்களை உணரவேண்டிய அவசியத்தை முன்னிட்டே இந்த ஆங்கிலக் கட்டுரைகள் ஆக்கி வெளியிடப் பெற்றன. திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எழுதிய 'The Vedas and the Agamas' திரு. எம். பாலசுப்ர மணிய முதலியார் எழுதிய 'Essence of Saivism' 'The four stages in the worship of Lord Siva' என்ற திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் கட்டுரை. M. அருணசல முதலியார் எழுதிய 'Panchakrithyam' திரு. சச்சிதானந்தம் பிள்ளை எழுதிய 'The Philosophy of Saiva Siddantha' என்பதையும், திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையின் 'The four Paths', திரு. R. சண்முகசுந்தரம் செட்டியார் எழுதிய 'Cleanings from Siva Siddhanta' திரு. A. முத்தையாப் பிள்ளையின் 'Siddhanta Saivam and its merits', திரு. காழி. சிவ கண்ணுசாமிப் பிள்ளையின் 'Thillai vazh Anthanar', திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை 'Sivaprakasam'. ஆகியவையும் நம் பத்திரிகையில் வந்து உலகப் புகழ் மிக்க கட்டுரைகள். இன்னும் 'The Ancient Tamils and the vedic faith' என்ற B, N. கிருஷ்ண மூர்த்தி சர்மாவின் அரிய கட்டுரையும், 'Sivagnana botham on Rahu and Kethu' என்ற வீரபத்திர முதலியார் கட்டு ரையும் நம் பத்திரிகையில் வந்த பழம் பெரும் சிந்தனைக் கட்டுரைகளாகும்.



(1) திருச்செந்தூரில் கந்தர்சஷ்டியின்போது
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும் அன்பர்களும்

(2) சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில்
வெள்ளத்தில் வீடிழந்த எளியவர்கள் தங்கியிருத்தல்.



தருமையாதீனத்திற்குச் சொந்தமான
வேளூர், ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் :

வெள்ளத்தில் வீடிழந்த எளியவர்கள் உணவு பெறுதல்

நீண்ட புதினம் (Novel) ஒன்றும் நம் நாட்டுப் பண்பை விளக்குமுறையில் வரவேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் கட்டளையிட்டபடி, திரு. சோ. சிங்கார வேலனால் "மாசில் வீணை" என்ற வரலாற்றுப் புதினம் ஒன்றையும் எழுதச்செய்து நமது பத்திரிகை வெளியிட்டிருக் கிறது. இலக்கியக் கட்டுரைகள் பலவும், ஏனைய சில ஓரங்க நாடகங்களும் வந்திருக்கின்றன. பஞ்சபூதத் தலங்களைப் பற்றியும், அட்ட வீரட்டங்களைப்பற்றியும் புராண வரலாறுகளைத் தழுவிய விளக்கக் கட்டுரைகளையும் வெளியிட்டுச் சமய மரபு பேணவும் ஞானசம்பந்தம் மிக்க பணி செய்திருக்கின்றது.

நம் ஆதீனச் செய்திகள் அழகுமிக்க நடையில் அவ்வத் திங்கள்தோறும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆதீனத்தில் என்னென்ன பணிகள் செய்யப்படுகின்றன என்று அறியாதவர் களுக்கு இது நல்ல ஆதாரமாக நின்று பயன்பட்டு வருவதாகும். ஆதீனத்தைச் சேர்ந்த தேவஸ்தானச் செய்திகளும் அவற்றைச் சார்ந்து வெளிவந்துள்ளன. மருத்துவம், பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி என்ற பகுதிகளில் அரிய பல செய்திகளைக் கட்டுரை வடிவில் தந்திருக்கிறோம். கோசார பலன் என்ற தலைப்பில் திருவிடைமருதூர் திரு. முத்து ஜோதிடர் அவர்களைக் கொண்டு மாதந்தோறும் ஒவ்வொருவர் எதிர்காலமும் விளக்கப் பட்டு வருகிறது.

சைவமேயன்றி வைணவச்சார்பான செய்திகளும், உண்மை களும் கட்டுரை வடிவில் தரப்பட்டுவந்திருக்கின்றன. அவற்றிற் சிறந்த பெருமக்களால் அவைபற்றி ஆராயப்பெற்ற முடிவுகள் பெரும்பாலோரால் பாராட்டுப்பெற்றவை. வடமொழி வாணர் களால் வடமொழி ஆகமத்திற் கூறப்பெற்ற கருத்துக்கள் எடுத்து மொழியப்பெற்றுள்ளன. கலை உணர்ச்சி விளக்கங் களும், அறிவியற் கட்டுரைகளும், வாழ்வியலுக்கேற்ற உண்மை களும் அவ்வப்போது வெளியிடப்பெற்றுள்ளன. சில பழக்கங் களின் மெய்ம்மை தெரியாமல் அவற்றைத் தவறென்று வாதம் புரிவோர் கொள்கை எவ்வளவு மூடக்கொள்கை என்பதை அறிவியல் அடிப்படையில் விளக்கும் தத்துவக் கட்டுரைகளால் பயன்பெற்றவர் பல்லோர்.

இலக்கணத்தில் உரையிலும், சூத்திரத்திலும் தவறுகளாக இதுகாறும் அச்சிடப்பெற்று வந்தவையும், கலித்தொகை போன்ற சங்க இலக்கியங்களில் தவறிய பகுதிகளாகவும் வந்திருப்பவையும் பன்மொழிப் புலவர் திரு. வேங்கடராஜுலு ரெட்டியார் போன்ற பழம்பெரும் புலவர்களால் எழுதப்பெற்ற திருத்தக் கட்டுரைகளும் ஏனைய இலக்கணப் பொருள்பற்றிய கட்டுரைகளும் இவ்விதழில் வெளியீடப்பெற்றுள்ளன. இவற்றின் வாயிலாகவும் மொழி இயலுக்கு நம் பத்திரிகை ஆற்றி வரும் தொண்டு பலர் பாராட்டைப் பெற்றுவருகின்றமை இங்கே நினைக்கத்தக்கதாகும்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் அருளுரைகள் அவ்வப்போது தரப்பெற்றுள்ளன. சிவக்கவி மணியவர்கள் எழுதிய கந்த புராணம் போற்றிக்கலி வெண்பா, பிற ஆசிரியர்கள் எழுதிய ஆகம விளக்கம், விரத விளக்கம், முதலியன வெளியிடப் பெற்றுள்ளன. ஆதீனக் குருமூர்த்திகளின் அற்புத வரலாற்றுப்பாமாலை, சவுந்திரியந்தாதி, உருப சொருப அகவல், முதலிய அரிய நூல் வெளியீடுகளும் சென்ற இரண்டாண்டில் வெளியிடப் பெற்றுள்ளன, தமிழின்பின் சென்ற திருவிளையாடல் முதலிய நாடகங்களும் தொடர்ந்து வெளியிடப் பெற்றன. புதிய கவிதை விருந்து வகையில் ‘‘ அன்பின் வெற்றி ’’ என்ற கவிதைத் தொடரும் வெளியிடப் பெற்றது. பேசா அநுபூதி, கம்பராமாயணக் கலக்கமும் தெளிவும், கோக்கிறகு, சிற்றிங்கணுடையான், வினைச்சோற்றிறம் முதலிய இலக்கிய ஆராய்ச்சிகளும், கல்வெட்டு, இலக்கண ஆராய்ச்சிகளும் வெளியிடப் பெற்றுள்ளன.

தருமையாதீன வெளியீடுகளைப்பற்றிய ஒரு திறனுய்வுக்கட்டுரைத் தொடரை வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும், சிவஞானபோதக் கட்டுரைத் தொடரை வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்களும் எழுதி வருகின்றார்கள். இது ஒரு பெரிய வாய்ப்பாகும்.

திருப்பனந்தாட் காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ அருணந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அறுபதாண்டு விழாமலரும், புள்ளிருக்குவேளூர் மலருமாகச் சென்ற இரண்டாண்டுகளில் வெளியிடப் பெற்றன. இதில் தொடர்ந்து வெளிவந்த ‘‘ பழந் தமிழ் நூல்களில் உயிர்வகைகள் ’’ என்ற கட்டுரைத் தொடர்

அதன் ஆசிரியர் திரு. சே. வேங்கடராமச் செட்டியாரால் நூல் உருவில் வெளியிடப்பட்டுள்ளது. ''புதுமைமக்கு'' என்ற (கடித வடிவில் அமைந்த) கட்டுரைத் தொடரும் நூலுருவில் வெளியிடச் செப்பமாய் உள்ளது. கயிலாய யாத்திரை, ஜோதிர்லிங்க யாத்திரைச் சுருக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

அவ்வப்போது வெளியிடப்பெறும் சமய நூல்களும், இலக்கிய நூல்களும் அன்பர்களால் அனுப்பப் பெறுகின்றன. திங்கள்தோறும் அந்நூல்கள் தக்கவர்களைக்கொண்டு மதிப்புரை (விமரிசனம்)களும் எழுதப் பெறுகின்றன. இதுவரை நூற்றுக் கணக்கான நூல்களின் மதிப்புரை வெளிவந்துள்ளது. நல்ல இசைவாணர்கள் எழுதும் இசைப்பாடல் (கீர்த்தனை)களும் அவ்வப்போது வெளியிடப்பெறுகின்றன.

இவ்வாறு பத்தொன்பது ஆண்டுகளில் ஞானசம்பந்தம் ஆற்றியுள்ள கட்டுரை, ஆராய்ச்சி, இலக்கிய, கவிதைப்பணிகள் பல. இவற்றால் தமிழ் உலகில் நிலைத்தபுகழையும் மதிப்பையும் ஞானசம்பந்தம் பெற்றிருக்கிறது என்று இவ்விருபதாம் ஆண்டுத் தொடக்கத்தில் மகிழ்ச்சியுடன் கூறப் பெருமிதம் அடைகின்றோம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK,

Dharmapuram Adhinam
Sri Sattainathaswami Devasthanam, Sirkali.

சீகாழி நகரில் சட்டைநாதசுவாமி கோயிலிலுள்ள நிர்வாகிகள் பெரும் மழையினால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்குத் தங்க இடம் அளித்து, உணவும் கொடுத்து ஏழைகளைக் காப்பாற்றியதற்காக தருமபுர ஆதீனத்தாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

கோயில்கள் பெரியதாகக் கட்டியுள்ள அருமை இப்பேர்ப்பட்ட சமயத்தில் நன்குவிளங்குகிறது. இக்கோயில்கள் இடமளித்திருக்கா விட்டால் அனேக ஏழைகள் பெருங்கஷ்டத்தை அனுபவித்திருப் பார்கள். அன்னமிட்டு இடமளித்த தருமபுர ஆதீனத்தாரை மீண்டும் பாராட்டுகிறேன்

(ஒ - ம்) கக்கன்,
19—11—60.

சிவ ஞான போதம்

கட்டுரை 23

(மலர் 19, இதழ் 11, பக்கம் 604 இன் தொடர்பு)

சென்ற இதழில் வெளிவந்ததன் தொடர்ச்சியாகச் சில வற்றை இதில் அறிவிக்கலாயிற்று. ஆதலின், இச் சாத்திரக் கட்டுரையைத் தொடர்ந்து கற்றுவரும் அன்பர் எல்லாரும் அவ்விதழையும் இதனோடு ஒருங்கு வைத்துணர்தல் நன்றாகும்.

இவ்வதிகரணத்தாற் போந்த தொகைப்பொருள் :— முதல்வன் வியாபகனுதலின் வியாபகப் பொருட்கு ஒன்ருய் நிற்றல் கூடாது. அது கூடாமையால் இரண்டாய் நிற்றல் ஆகாதோ எனின், வியாபகன் ஆதல் கூடாது. வியாப கத்துக்கு ஒன்ருய் நிற்றலும் இரண்டாய் நிற்றலுக்கு வியாபகமும் அமையாமையின், வியாபகன் அல்லன் எனின், அவன் இன்றிப் பசுவும் பாசமும் அமைதல் இன்ரும். ஆதலின், முதல்வன் ஒருவனே கதிர்வனும் கதிரொளியும் போலச் சிவமும் சத்தியும் எனத் தாதான்மியத்தால் இரு திறப்பட்டுச் சருவவியாபியாய்ப் பொதுமையியில் நிற்பன் எனச் சமவேதமாய் நிற்கும் ஆற்றைத் தெளிவிக்கும் முகத் தால் தாதான்மியசத்தி உண்மையும் அதன் உண்மைக்குப் பிரமாணமும் கூறியவாரும் என்று உணர்க இங்கு முன் இதழில் 667 ஆவது பக்கத்தில் உள்ள உவமையையும் உவமேயத்தையும் நோக்கிக்கொள்க.

தீயின் சத்தி ஒன்றே ஆயினும் சுடுதல் அடுதல் முதலிய தொழில் வேறுபாடுள்ளமையால் சுடுஞ்சத்தி அடுஞ் சத்தி முதலாகப் பலவேறு வகைப்படுகின்றது அச்சத்தி. அதுபோலச் சிவசத்தி ஒன்றே காரியபேதத்தால் பராசக்தி, ஆதி சத்தி, இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்று

ஐவகையாயும்; அவை ஐந்து கூறுடைய ஈசானி, நான்கு கூறுடைய பூரணி, எட்டுக் கூறுடைய ஆர்த்தி, பதின் மூன்று கூறுடைய வாமை. எட்டுக் கூறுடைய மூர்த்தி என்று ஐவகைச் சத்திகளாயும்; ஆரணி, ஜனனி, இரோத யித்திரி என்று மூவகைச் சத்திகளாயும்; நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்று ஐவகைச் சத்திகளாயும்; வாமை, சேட்டை, இரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சருவ பூததமனி என்று எட்டுச் சத்திகளாயும்! ஏழு சிவபேதங் கட்கும் முறையே உரிய பரவாகீசுவரி, அபரவாகீசுவரி, மனோன்மனி, மகேசுவரி, உமை, திரு, வாணி என்னும் ஏழு சத்திகளாயும்: 'அத்தியான்மிகம்' எனப்படும் உன்மனே, சமனே, வியாபினி, சத்தி, நாதாந்தம், நாதம், நிரோதி, அர்த்தசந்திரன், விந்து, மகாரம், உகாரம், அகாரம் பன்னிரு கலைகளாயும்; அவற்றோடு அநந்தை முதலிய நான்கு சேர்ந்து பதினாறு கலைகளாயும், மற்றும் சூக்குமம், அதி சூக்குமம், அமிர்தை, அமிர்தாமிதை, இந்திகை, தீபிகை, உரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை முதலிய பலகலை களாயும் இன்னும் பலவேறு வகைப்பட்டும் நிற்கும். அவ்வச் சத்தியோடு சாரும் சிவமும் அத்திறத்தால் வேவ்வேறு பேயர் பேற்று நிற்கும். அவ்வச் சத்தி சிவங்கட்கு இடமாய் நின்ற விந்துவும் (மாயையும்) அவ்வாறு பலவேறு வகை யால் வளர்ந்து அவ்வப் பேயர் பேறும்

க. ஈசானியின் ஐந்து கூறுகளாவன:- (1) சசினி, (2) அங்கதை, (3) இட்டை, (4) மரீசி, (5) சுவாலினி.

உ. பூரணியின் நான்கு கூறுகளாவன:- (1) சாந்தி, (2) வித்தை, (3) பிரதிட்டை, (4) நிவிர்த்தி.

ங. ஆர்த்தியின் எட்டுக் கூறுகளாவன:- (1) தமை, (2) மோகை, (3) சயை, (4) நிட்டை, (5) மிருத்தியு, (6) மாயை. (7) பயை, (8) சரை.

ச. வாமையின் பதின்மூன்று கூறுகளாவன :- (1) இரசை, (2) இரட்சை, (3) இரதி, (4) பாலி, (5) காமை, (6) சம்யமினி, (7) கிரியை, (8) புத்தி, (9) காரி (10) தாத்திரி, (11) பிராம்மணி, (12) மோகினி (13) பவை.

ரு. மூர்த்தியின் எட்டுக் கூறுகளாவன :- (1) சித்தி, (2) இருத்தி, (3) தியுதி, (4) இலக்குமி, (5) மேதை, (6) காந்தி, (7) சுவதை, (8) திருதி. சத்திபேதங்களின் இயல்பெல்லாம் ஆகமங்களுட் காண்க.

இரண்டாவது சூத்திரம் நான்காவது அதிகரணம் முற்றிற்று.

(தொடரும்)

ஒரு வேண்டுகோள்

'ஞானசம்பந்தம்' இதழின் ஆண்டுக்கட்டணம் மாற்றம்

அன்புடையீர்! வணக்கம், தங்களது ஒத்துழைப்பால் "ஞானசம்பந்தம்" பெருகி வளர்ந்து இவ்விதழில் இருபதாம் ஆண்டு தொடங்குகிறது. பல காரணங்களையொட்டி இவ்விதழின் ஆண்டுக் கட்டணத்தை 1—1—1961 முதல்

உள்நாடு ரூ. 2 - 25 வெளிநாடு ரூ. 3 - 00

என்று மாற்ற முடிவு செய்துள்ளோம். 31-12-1960 வரை ஆண்டுக்கட்டணம் பழைய முறையிலேயே இருந்துவரும். அந்த தேதிக்குள் காரியாலயத்துக்கு வந்துசேரும் தொகை பழைய சந்தா கணக்குப்படி வரவு வைத்துக்கொள்ளப்படும். இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளவும். சந்தாதாரர் அனைவரும் இம்மாற்றத்தை ஏற்று மேலும் எங்களோடு ஒத்துழைத்துப் பத்திரிகை வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம். இப்புதிய ஆண்டில் எங்களது நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

— செயலாளர்.

உ
குருபாதம்

தருமையாதீன மடாலயத்திற்குச்

சென்னை மாநில ஆளுநர் வருகையின்போது

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

அருளாசி

அன்பர்களே! நம்முன்னிலையில் இன்று அஸ்ஸாம் தந்த அறிவுச்செல்வராக உள்ள நம் சென்னை மாநில ஆளுநராகிய கனம். திரு. விஷ்ணுராம் மேதியவர்கள் இருக்கிறார். அவரது வருகையின் நல்ல அறிகுறியாக மழைநின்றுவிட்டது. அஸ்ஸாம் மாகாணத்திலே அதிக மழை பெய்யுமாம். ஆனால் அந்த அறிவுச் செல்வராக உள்ள ஆளுநர் அவர்கள் இங்கு வந்து மழையின் துன்பத்தை நீக்கியிருக்கிறார். தஞ்சை மாவட்டத்தில் பெருமழையினால் வயல்களெல்லாம் - தாளடிப் பயிர்களெல்லாம் கெட்டுள்ள நிலையில் அஞ்சவேண்டாம் என்று அபயம் கொடுப்பது போல் திரு. மேதியவர்கள் வருகை புரிந்துள்ளார்; இதற்கெல்லாம் காரணம் சந்திரசேகரன் (தஞ்சை மாவட்டத் தண்டல் நாயகம்)தான். சந்திரசேகரன்தானே விஷ்ணுவை அழைத்துவர முடியும்! விஷ்ணு காத்தற் கடவுள் அல்லவா? அதிலும் இராமநாமத்துடன் கூடிய அவதார விஷ்ணுவாக இவர் உள்ளார் என்றே கூறலாம்.

இரும்பு மனிதராக இருந்த சர்தார் வல்லபாய்பட்டேல் இப்போது இல்லை. இருப்பினும் இப்போது உள்ள இரும்பு மனிதராக நம் மேதியவர்கள் விளங்குகின்றார். தஞ்சை மாவட்டத்துக்கு அபயம் கொடுப்பதுபோன்று வருகை தந்துள்ள மேதியவர்களைப் பண்புகளின் உறைவிடம் என்றே கூறி விடலாம். நாம் பக்தி பக்தி என்று அடிக்கடிக் கூறிவருவதுண்டு. அரசியலும் சமயமும் வேறல்ல என்று விளக்குவதுண்டு. நம் மேதியவர்கள் இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டு ஆவார். நம்மைக் காணவந்தவர் புஷ்பம், தேங்காய் பழம் எல்லாம் கொண்டுவந்தார்; பாதகாணிக்கை வைத்தார்; நமஸ்காரமும் செய்தார். எதைக் காட்டுகிறது? ஆண்டவன் திருவருள் இல்லையென்று சொன்னால் ஆட்சி செம்மையான முறையில் நடக்கமுடியாது. வடநாட்டில் தெய்வபக்தி அதிகம்

பராசக்தியிடம் அதிக அன்புகொண்டவர்கள் அங்குள்ள மக்கள் அனைவரும். தினந்தோறும் பூஜைகள் செய்வது அவர்கள் இயல்பாக உள்ளது. அங்கே யாத்திரை செய்தவர்கள் இதனை நன்கு உணர்வார்கள்.

நாம் கயிலாச யாத்திரையில் இருந்தபோது நம் ஆதீனத் திருக்கோயில்களாகிய வைத்தீஸ்வரன் கோயில், திருக்கடவூர், திருவையாறு, முதலிய தலங்களில் வந்து மேதியவர்கள் வழிபட்டார். அந்நிழற்படங்களைப் பார்த்தால் அவருடைய உருக்கம் தெரியும். உள்ளமுருகி நின்று வழிபட்ட மாண்பும் உடையவர்கள். ஆட்சியில் உள்ளவர்கள் இவ்வாறு செம்மை யான முறையில் இருத்தல் அவசியம். அப்போதுதான் நாடு முன்னேறும்; நன்மை செழிக்கும்.

இன்று இங்கே இந்தவிழா இவ்வளவு செம்மையாக நிகழ் கிறது என்று சொன்னால் தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் திரு. சந்திரசேகரனது முயற்சிதான் காரணம. எல்லா நன்றியும் அவர்க்கே உரியது. முன்னே சொன்னதுபோலக் காத்தற் கடவுளை அழைத்துவரும் வாய்ப்பும் பெருமையும் உடையவர் அவரே அல்லவா ?

கனம் மேதியவர்கள் வழக்கறிஞராக இருந்தவர். நன்கு சம்பாதிக்ககூடிய நிலையில் அரசியற் போராட்டத்தில் குதித்தார். காந்தீயத்தில் உறுதியான பற்று உள்ளவர்.

அன்னை பராசக்தியின் திருவருளும் குருஞானசம்பந்தப் பெருமான் குருவருளும் அவர்க்குப் பெருகவேண்டும். விவசாயிகளுக்கும், நில உரிமையாளர்களுக்கும், ஏன் — மடத்துக்குங் கூடத்தான் உதவி செய்யவேண்டியுள்ள நிலை இப்பெருமழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ளது. மேதி அவர்களை எண்ணும்போது சேரமான் பெருமான், மணிவாசகர், சிறுத் தொண்டர் முதலிய நாயன்மார்கள் நினைப்பே வருகிறது. ஆளுநர் அவர்கள் மதுரைக்குச்சென்றிருந்தபோது, யாருக்குமே தெரியாது; திடீரென்று திருக்கோயிலுக்குள் புகுந்து வழிபட்ட செய்தியை நாடு அறியும்.

இத்தகு சிறப்புக்கள் அமைந்த கனம், திரு. விஷ்ணுராம் மேதியவர்கள் நம் சென்னை மாநிலத்துஆட்சி தெய்வ ஆட்சி யாக இருத்தல் வேண்டும் என்ற குறிக்கோளுடையவர்கள். இவர்களுக்கு நல்லன எல்லாம் பெருகவேண்டும் என்று செந்தமிழ்ச் சொக்கர் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்து கின்றோம்.

தென்னாடுடைய சிவனே போற்றி !

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !

தருமையாதீனம் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி ஆலயத்திருமுன்பு :

சென்னை மாநில ஆளுநர் ஸ்ரீ விஷ்ணுராம்மேதி அவர்களுக்குப்
பூரணகும்ப மரியாதை



(1) தருமை யாதீன மடாலயத்தில், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை, சென்னை மாநில ஆளுநர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி அவர்களும், தஞ்சை மாவட்டத்தண்டல் நாயகம், திரு. சந்திரசேகரன் அவர்களும் தரிசித்தல்.

தருமையாதீனத் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில்
சென்னைமாநில ஆளுநர் அவர்களுக்கு ஆதீனக் கல்விநிலையங்களின் சார்பில் அளித்த வரவேற்புவிழா

(2) பெருமக்கள் கூட்டத்தின் ஒரு பகுதி

(3) ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சென்னை மாநில ஆளுநர் அவர்களை வரவேற்று அருளுரை வழங்குதல்



தருமையாதீனம் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி ஆலயத்திருமுன்பு :



சென்னை மாநில ஆளுநர் ஸ்ரீ விஷ்ணுராம்மேதி அவர்களை
ஆதீனக்கல்விநிலையங்களின் சார்பிலும் ஆதீனச்சார்பிலும் வரவேற்றல்,

சென்னை மாநில ஆளுநர் அவர்கள் ஆற்றிய

பேருரைச் சுருக்கம்

" தெய்வீகசக்தி, தெய்வீக ஒளியிலிருந்து வரும் பளீரிடுகின்ற சிறுபொருள் போன்ற தோழமைகொண்டு கூட்டமாக வாழும் பழக்கம் உடையவன் மனிதன். உலகத்தைத் துறக்க அனைவராலும் இயலாது. அனைத்தையும் அர்ப்பணித்துத் தூய வாழ்வு வாழும் மஹான்கள், மஹாத்மாக்கள் ஆகியோரின் போதனைகள்மூலம் மக்கள் பெரிதும் பயனடையலாம். தருமபுரம் மடத்தைப்போல மடங்களையும், ஆச்ரமங்களையும் மத (ஞான) அறிவு நிலையங்களாகவே நான் கருதுகிறேன். இந்த மடங்கள் தத்துவ ஞானக் கருத்துக்களைப் பாமரமக்களுக்குப் பரப்புவதில் முதன்மையான அரிய சேவை புரிகின்றன. இந்த சிறந்த தத்துவ ஞானக் கருத்துக்களை நன்கு உணர்ந்து ஆண்டவன் அருளை அடைய நல்ல சரியான மார்க்கத்தில் முன்னேறப் பெரிதும் உதவுகிறது.

பகுத்தறிவு உள்ளவன் மனிதன். நல்லவை தீயவை இவைகளைப் பாகுபாடு செய்து, நமது அறிவு, விவேகம் ஆகியவை மூலம் தீய குணங்களை அடியோடு விலக்கி சரியான ராஜ பாட்டையில் நம்மைச் சேர்ப்பித்து, முன்னேற்றுவிக்க, புனிதத் தன்மையுடைய தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் போன்ற பெரிய மஹான்களால்தான் ஆவன செய்ய முடியும். தருமை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சிறப்புடன் ஆற்றிவரும், பொதுநல சமூக சமுதாயப் பணிகளைப் பெரிதும் பாராட்டுகிறேன். மகா கடினமான யாத்திரையை வெற்றிகரமாகப் புரிந்தருளி பல புண்ணிய ஸ்தலங்களையும் தீர்த்தங்களையும் க்ஷேத்திராடனம் செய்து வணங்கி இறைவனுடைய பெரிய அருள் சக்தி பெற்று எல்லோருக்கும் ஆண்டவன் அருளை வாரி வழங்கும் ஞானபீடத்தில் அருளரசு புரியும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அறப்பணிகளையும், அருள் பணிகளையும் பாராட்டுவதுடன் போற்றி வணங்குகிறேன். நமது பாரதநாட்டில் ஹிந்து தருமம் உஜ்ஜீவனம் அடையவும், நாட்டில் தீய சக்தி பரவவிடாமல் சைவ சமயம் தழைத்தோங்கவும் தருமபுரம் ஆதீனத்தைத் தலைமை ஸ்தானமாக கொண்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் மகத்தான தொண்டு செய்து வருவது மிகவும் போற்றத்தக்கது. ஞானபுருஷரான, சமயாசாரியரான ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் போன்ற பெரிய மஹான்கள்மூலமாகத்தான் (கடவுள்) ஆண்டவன் அருளைப் பெறமுடியும். ஆதீனத்தில் செய்த மகத்தான வரவேற்புகளுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்

சைவ சித்தாந்தம்

திருவாவடுதுறை ஆதீன வித்துவான், சித்தாந்த சைவமணி,

த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை

(மலர் 19, இதழ் 12, பக்கம் 702 இன் தொடர்ச்சி)

1. எல்லாப் பொருள்களையும் பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருளில் அடக்கிவிடலாம்.

2. உயிர்கள் சகுணக் கடவுளின் இலக்கணத்தை அறிந்து வழிபட்ட பிறகே நிர்க்குணக் கடவுளை அறிந்து வழிபடல் வேண்டும். சகுணராகவும் நிர்க்குணராகவும் வழிபடும் முறை உண்டு.

3. கடவுள் எட்டுக் குணங்களோடு கூடியவர். அவை மாயாகுணங்களல்ல, அருட்குணங்களே. இந்த எட்டுக் குணங்களையுடைய கடவுளே உலகத்துக்கு நாயகனுக இருக்கிருர். உயிர்த் தலைவராகவும் விளங்குகிருர்.

4. அருவம், உருவம், அருவுருவம் என்ற மூவகை வழிபாடுண்டு. அருவுருவ வழிபாடுதான் சிவலிங்கபூசை. உருவ வழிபாடு (25) மாகேசுர மூர்த்தங்கள்.

5. கடவுள் நிமித்தகாரணர். முதற்காரணம் மாயை. துணைக் காரணம் சத்தி. நிமித்தகாரணம் சிவன். மண் - தண்ட சக்கரம் - குலாலன் உதாரணம். உள்ளது போகாது. இல்லது வாராது என்பதுதான் சத்தியகாரியவாதம். சூக்குமத்திலிருந்து தூலப்பொருள்கள் தோன்றின என்பதே அது. கடவுள் இலக்கணம் கூறும் சித்தியார் - முதற் சூத்திர இறுதி

" சிவன் அருவுருவு மல்லன் சித்தினே டசித்து மல்லன்
பவமுதற் ருெழில்க ளொன்றும் பண்ணிடு வானு மல்லன்
தவமுதல் யோக போகம் தரிப்பவ னல்லன் தானே
இவைபெற இயைந்து மொன்றும் இயைந்திடா இயல்பினுனே "

என்பன அனைத்தும் முதல்வனுக்குத் தடத்தலக்கணம். (போது இயல்பு)

"அறிவுறும் பொருளோ ஈசன் அறிவுரு தவனே என்னில்
அறிபொருள் அசித்த சத்தாம் அறியாத தின்று மேங்கும்
செறிசிவம் இரண்டு மின்றிச் சித்தோடு சத்தாய் நிற்கும்
நெறிதரு சத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றிடாவே"

என்பது சொருபிலக்கணம். (சிறப்பியல்பு)

உயிரிலக்கணம் :

உயிர் அல்லது ஆன்மா கடவுளைப்போலவே ஆதியந்த மில்லாத பொருள். கடவுள் உயிர்களை உண்டாக்குவதில்லை. ஆன்மாக்கள் எண்ணில்லாதன. உடம்புகளையும் மற்றவை களையுமே உண்டாக்குகின்றார். தத்துவங்கள் அகநிலைக் கருவி கள், தாத்துவிகங்கள் புறநிலைக் கருவிகள். 36+60=96. இத் தத்துவங்களை அறிந்து உயிர் இவைகட்கு வேறாய் நிற்க வேண்டும்.

"ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொதுஎன்பர்
ஆகின்ற வாறு றருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே"

(திருமந்திரம் - 2179

உயிர், பிராணவாயு பொறி புலன் கரணங்கள் இவற்றிற்கு வேறாய் உள்ளது. ஆன்மாவுக்கு ஐந்தவத்தைகள் உண்டு. உயிர்கள் மூவகை. விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்பன. ஆணவம், கன்மம், மாயை என மூன்று மலங்கள். ஆன்மா சதசத்து. சார்ந்ததன் வண்ணமானது. உலகத்தைச் சார்ந்தபோது பாசம் பற்றிக்கொள்ளும். கடவுளைச் சார்ந்த போது பாசம் விலகும். உலகத்தைச் சார்ந்தால் அசத்தாம். கடவுளைச் சார்ந்தால் சத்தாம்.

பாசம் :

செம்பில் களிம்பு இருப்பதுபோல் இயல்பாகவே உயிரில் ஒரு குற்றம் உள்ளது. அது தடைப்பொருள். உயிர் கடவுளை

அடையவோட்டாமல் தடுத்து நிற்பது அது. ஆணவம், கன்மம், மாயை என மூன்று மலங்களில் ஆணவம் மூலமலம் இருள் மலம் என்று பேசப்படும். மலம் அசத்து.

சுத்தமாயை விஞ்ஞானகலர் பிரளயாகலருக்குத் தனுகரண புவன போகமாய் உள்ளது. அசுத்தமாயை சகலருக்காம். நல்வினை தீவினைகள் உண்டு. ஆணவமலம் யான் எனது என்னும் அகப்பற்றுப் புறப்பற்றுக்களை உண்டாக்கும். மேலும் வினைகளைச் செய்யுமாறும் தூண்டும். கடவுளின் ஆணையே மலங்களைச் செலுத்தும். பழைய வினையின் அளவுக்குத்தகக் கடவுள் அவ்வப்போது தனுகரண புவனங்களைத் தருகிறார். ஆகாமியம், பிராரத்தம், சஞ்சிதம் என வினைகள் உள. இவற்றால் கடல் அலைகள்போலப் பிறவிகள் இடையறாது வருவனவாம்.

கடவுள் செய்யும் ஐந்தொழில்களில் முதல் மூன்றும் உடம்பைப் பற்றியன. இறுதியிரண்டும் உயிரைப் பற்றியன. அழிப்பு என்பது இளைப்பாற்றலாம். தண்டனையும் கருணைச் செயலே.

உயிர் பாசத்தை நீக்கும் வழிகள் :

ஆணவத்தால் யான் எனது என்னும் பற்றுக்கள் விளைவன. மாயையால் உலக இன்பத்தைப் பெரிதாக மதிக்கிறோம். கன்மத்தால் நல்வினை தீவினைகள் நிகழும். பாசக்கட்டு நீங்க வேண்டுமானால் உயிரைப்பற்றிய இந்த முக்குற்றமும் நீங்க வகைதேடவேண்டும். பற்று நீங்குதற்கு மனம் முதலிய கருவிகள் இறைவனைப் பற்றுக்கோடாகக் கொள்ளவேண்டும். இதனால்,

> "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு"

என்றார் திருவள்ளுவர். மனம் ஒரு குரங்கு. அது ஏதேனும் ஒரு கிளையைப் பற்றியே வாழும். அதுதான் பற்றுக்கோடு என்பது. உலகப்பற்றில் நீங்க ஆன்மா உபாயம் தேடுதல் அவசியம். அந்த உபாயங்களே சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. இந்தச் சாதனங்களை அடைதற்கு முன்பு சமயப் பிரவேசம் என்ற ஒரு சடங்கைச் செய்துகொள்ள வேண்டும். சரியைத் தொண்டாவது :- ஒரு எஜமானனுக்கு

வேலைக்காரன் என்னென்ன உபசாரம் செய்வானோ அவ்விதம் செய்தல். இறைவனை நினைந்து தொண்டு செய்தலால் வேறு பற்றுக்கள் நிகழா. ஆணவமலவலிகுன்றும். " நிலைபெறுமாறு எண்ணுதியேல்...... " - புறம்.

கிரியைத் தொண்டு : ஒரு வடிவத்திலே இறைவனை வைத்துப் பூசித்தல். அபிஷேகம் முதலிய உபசாரங்கள் புரிதல். தீயை வளர்த்து அதனை இறைவனாகப் பாவித்து வேள்வி செய்தல். இது மகன்மை முறையாம். அகம் புறம்.

யோகமாவது : பிராணாயாமம் முதலிய யோக அங்கங்களால் ஒளிவடிவாக இறைவனைக் கண்டு பூசித்தல். இது அக வழிபாடு. இது தோழன் முறை.

ஞானமாவது : ஞானநூல் ஓதல் - முதலிய செயல்களால் நன்கு பயின்று எங்கும் இறைவடிவமாகக் கண்டு பூசித்தல். இது சன்மார்க்கம். இந்த நான்கு சாதனங்களும் இன்றியமையாதனவே. ஞானம் முதிர்ந்த நிலையிலும் கூடக் கோயில் வழிபாடு, தொண்டர் கூட்டுறவு, பஞ்சாக்கர சேபம், சிவவேடமே பொருளெனக்கொண்ட வாழ்வு எல்லாம் வேண்டும். ஒன்றும் குறைதல் கூடாது.

சைவ சித்தாந்த சமயத்தில் ஒழுகுவோர் கடைப்பிடியாகக் கொள்ளவேண்டியவை சிலவுள :-

1. கடவுள் நம்பிக்கை. 2. கடவுள் உயிரைப் படைத்தல் இல்லை; உயிர்களின்பொருட்டே உலகம் முதலியவற்றைப் படைத்துக் காத்து அழிக்கின்றார். அழிப்பு இளைப்பாறுதலே. படைப்பு என்பது சூக்குமமாகிய மாயையிலிருந்து தூலமாகிய உலகம் உடம்புமுதலியவற்றைத் தோற்றுவித்தல். 3. உயிர்கள் இயல்பாகவே அகப்பற்றுப் புறப்பற்றுடையன. 4. உலககாரியங்கள் அனைத்தும் இருவகைப்பற்றாலேயே விளைகின்றன. 5. உலக வாழ்வு இன்பமாகக் காணப்பட்டாலும் துன்பமே. 6. உலகப்பற்று விடுதலே உயிர்க்கு இன்பமாம். 7. உலகப் பற்று ஒழியக் கடவுட்பற்று மிகுதியாகவேண்டும். 8. கடவுள் அன்பே வடிவாகவுள்ளார். அருளே அவர் வடிவம், அறிவே அவர் உரு, இன்பமே நிலைக்களம் என உணர்தல் வேண்டும்.

9. தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருபவர் கடவுள். கடவுளைச் சாரச் சார இன்பம் உண்டு. 10. திருநீறு, உருத்திராக்கம், பஞ்சாக்கரசேபம், சிவபூசை, குருவழிபாடு, அடியார் வழிபாடு, சிவதரிசனம் முதலியன இன்றியமையாமல் என்றும் வேண்டப்படுவன. 11. இவைகளால் சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய சாதனங்கள் நிலைபெறும். 12. அச்சாதனங்களாற் பயன் இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், சிவசாயுச்சியம் என்பன. 13. என்றும் எல்லாவுயிர்களிடத்தும் அன்பும் இரக்கமும் அவசியம். 14. பேரின்பத்துக்குச் சாதனமான சிவஞானத்தைப் பெறவேண்டுமானால் குரு உபதேசம் வேண்டும். சிவஞானபோதம்முதலிய பதினான்கு சாத்திரங்களையும், தேவார திருவாசகம் முதலிய பன்னிருதிருமுறைகளையும் நன்கு கற்றுத் தெளியவேண்டும். 15. எல்லாம் சிவச்செயலெனக் கொள்ளும் துணிவு பெறவேண்டும். இதில் ஐயப்பாடு கூடாது. நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனச் செயலில் நின்று காட்டவேண்டும். 16. எல்லாவுயிரும் பராபரன் சந்நிதியெனவேகொண்டு சிறு தீங்கும் செய்யாதிருத்தல் வேண்டும். 17. உயிர்க்குயிராகிய பசுபதியை நாம் என்றும் அகன்று நிற்றல் கூடாது. 18. சூரியன் பேரொளியுடன் விளங்கினும் குருடன் காணுமாறில்லை. அதுபோல, அருட்கண் இல்லாருக்கு முதல்வனை அறியுமாறில்லை. 19. அருட்கண்ணும் பக்குவமுடையாருக்கே கிடைக்கும். 20. முதல்வன் பக்குவிகட்கு அப்பருவம்நோக்கி அருட்கண்ணைத் தருவன். அறிவுக்கறிவாய் நின்று உபகரிப்பான் என்ற உண்மைகளை அறிக. முத்தியிலும் முப்பொருள்கள் உண்டு. முதல்வனின் அருள்சேர்முத்தியே சித்தாந்த முத்தி என்பன. இன்னும் ஞான நூல்களினால் அறிந்துகொள்க.

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், செ. செல்வப்ப முதலியார்

உதிப்பின்றிச் செய்யும் விருப்பின்றி நிற்ற லுளத்திற் சினங்
கோதிப்பின்றிச் செய்யு மெதிர்ப்பின்றி நிற்றல் கொடுநாகிற்
பதிப்பின்றிச் செய்யுஞ் சதிப்பின்றி வாழ்தல் படியின்மிசை
மதிப்பின்றிச் செய்யு மவச்சோற் கிடந்தரல் மாதரசே. 73

அன்பின் வெற்றி

செஞ்சோற்கோண்டல்
வித்துவான், சொ. சிங்காரவேலன் B. A.

(மலர் 19, இதழ் 12, பக்கம் 676 இன் தொடர்ச்சி)

ஆறும் படலம்

" அன்பின் வெற்றி "

தமிழ்ச் செல்வன் சிந்தனைதோய்ந் திருமுகத்தான்
தன்மனையின் தாழ்வாரப் புறத்தே நின்றான் ;
" தமிழ்ப்புலத்தில் தகுங்காதல் நேறிதழைக்கத்
தகுதியிலை ; என்போன்றோர் வாழ்வுநோக்கில்,
அமிழ்தமதிற் சிறுநஞ்சு கலத்தல்போலே
அடுத்ததென்றால் துயர்வந்து, அயர்த லாமோ ?
தமிழ்க்கல்வி தறுகண்மை உண்டேன்றாலும்
தடையுண்டே ; என்செய்வேன் " என்றே நைந்தான் ! 67

உள்ளூரிற் பள்ளியிலே எழுத்துக் கூட்டி
உணர்வளித்துச் சிறுவர்மனச் செழும்புலத்தை
அள்ளூறச் செய்ததனிற் றமிழ் எழுத்தாம்
அருவியினைப் பாயவிட்டுக் கலைகளென்னும்
தெள்ளியநல் விதையீட்டுத் தினமும் பேணித்
திருமகளாய்க் கலைமகளாய் விளங்கும் செல்வி
முள்ளூறும் அமிழ்தெயிற்று முறுவற் செவ்வாய்
முகமுடையாள் பான்மொழியை அடைவ தெங்ஙன் ? 68

படித்ததனாற் பண்புணர்ந்து பாதை எல்லை
பழகியதை வழுவாமல் வாழ்வேன் முன்னே,
துடிப்பதனாற் தூய்மைநேறி வழுவலாமோ ?
தூயமதி நிலவதனை மாறிற்றுண்டோ ?

ஒடித்ததனுல் குமரனைநான் என்னுள்ளத்தே
ஒறுத்திடற்குத் துடித்தலும், சமூக மென்னும்
அடித்தலத்தை எவ்வாறு கடப்பேன் ; அந்த
அமுதமொழி தனையெவ் வாறடைவேன் இங்கே? 69

'மலரைவிட மெல்லிதாம் காதல்' என்றே
மாண்புள்ள குறள்பாடி வழியும் காட்டும் ;
மலரதனிற் றேனுண்ணும் வண்டு போலே
மனமாறித் திசைமாறி மயங்கல் தீமை ;
சிலரதனிற் றவறிடுவா ரேனும் அந்தச்
செஞ்சொல்லை உளங்கொண்ட யானே இங்குப்
பலரிகழப் புறஞ்செல்லேன், செல்லேன்'' என்று
பலநினைத்துப் படருமவன் இனிய நெஞ்சம். 70

கல்விக்கும் நடைமுறைக்கும் தொலைவு கண்டோர்
கணக்கற்றோர் உண்டிந்த உலகில் ; ஆனால்
செல்விக்கும் செல்வற்கும் பண்பே யன்றோ
சிறப்புநெறி ? ஆதலினால் மனப்போராட்டம்
நல்வித்தாந் தமிழ்ச்செல்வன் நெஞ்சகத்தே
நாட்டமுற வாடிநின்றான் ; அந்நேரத்தே
கொல்விக்குங் கூர்வாள்போல் விழிகளாலே
கொன்றபடி வெளியிருந்து வந்தார் தந்தை. 71

ஏனிந்தச் சினம்தனது தந்தை யாருக்கு
எழுந்ததென்று திகைத்திடுமுன் தந்தை வார்த்தை
வானிடிந்து வீழ்ந்ததுபோல் செவியிற் கேட்டான் :
"வளர்த்தேனே ? இதற்கெனவோ ? நல்லபிள்ளை,
தேனினிக்கும் படியினிப்பான் என்றே யெண்ணித்
தெளிந்திருந்தேன் உள்ளத்தைப் போய்த்தாய், ஏடா ?
நானிருக்கும போதுனக்குக காதல் கேடா ?
நன்மையதைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டாய்? 72

பெரியவர்கள் எல்லையொன்று இருப்பதைத்தான்
பேதைமையால் மறந்தனையோ ?'' - பொரிந்தார் தந்தை ;
'சிறியவன்நான் ; எனினுமொன்றை உரைப்பேன் சற்றுச்
செவிகொடுங்கள் அப்பா !' என் றிரந்துநின்றான் ;
"நரிக்குணத்தார் சிலர்மொழியைக் கேட்பீர் போலும் ;
நலங்கெடுப்போர் மொழிமனத்தை நலித்த போலும் ;
உரியமுறை தனையென்றும் மீற மாட்டேன் ;
உறுதிஇது'' எனஉரைத்தான் பணிவோ டன்னோன் ! 73

' மீருத நீயோஅப் பெண்ணி னேடு
 மேலுலகக் காதலிங்கு பேசு கின்ருய் ?'
ஆருதசினத்தோடு அவர் முழங்கும்
 அரியவினு இது ; தநயன் விடையும் ஈது :-
' மாருத அன்பினையான் மாண்பு வாய்ந்து
 மலிந்திடுமந் நங்கையிடம் வைத்த தாலே
தேருதநிலைகொண்டே னல்லேன் தந்தாய் ;
 தேர்ந்திருந்தேன் தங்கள்பால் உரைத்திடற்கே. 74

படிக்கவைத்து வளர்த்தென்னை அன்பு கூட்டிப்
 பரிவோடு பேணிவரும் தந்தாய் ! என்னைத்
துடிக்கவைக்க எண்ணுவிரோ ? அறத்தை விட்டுத்
 துளிக்கூடப் பிழையாத தங்கள் பிள்ளை
நடிக்கத்தான் வல்லவனே ? உண்மை ; அந்த
 நங்கைநல் லறிவுடையாள் ஆதலாலே
பிடிக்குமுளத் தன்பாலே பிணைந்தோம் " என்ருன் ;
 பேச்சற்றுநெட்டுயிர்த்துச் சென்ருர் தந்தை. 75

அந்திவர, அமைதிபெற எண்ணிவீட்டை
 அகன்றுதிருக் கோயிற்பூங் காவின்பக்கம்
முந்திநின்ருன் தமிழ்ச்செல்வன் ; தந்தைக் கன்று
 மூண்டதுயர்ச் சுமைக்குத்தா னன்றே மூலம் !
சிந்தித்த படியதற்குத் தீர்வு காணச்
 சிலதொலைவு நடந்ததற்பின் இருளில் ஓராள்
தோங்திக்குப் புறத்திருந்த துகிலும் ஆடத்
 தோங்தோமென் ருேடுதலைக் கண்ணிற் கண்டான். 76

ஓடுகின்ற அன்னவனைக் கேட்டறிந்தே
 உவந்தனனத் தமிழ்ச்செல்வன் ; குமரனுக்குக்
கேடுவந்து சூழ்ந்ததுவே மயக்கம் என்று
 கிளர்கின்ற பெயராலே ; மருத்துவர்க்கு
ஓடுகின்ருன் என்றறிந்தான் ; மனைக்கு மீள
 உளத்தெண்ணித் திரும்புகையில் மரத்தின்பின்னுல்
ஆடுகின்ற கழியொன்றைக் கண்டான் ; மேலே
 அடிவிழுந்த தன்பின்னர் நினைவிழந்தான் ! 77

குமரன்கைக் கூலிபெற்ற குறும்பர் சில்லோர்
 கொடுத்தனரவ் வடிபின்னே இருளில் ஓடித்
தமதுருவைக் கரந்திட்டார் ; மயங்கி வீழ்ந்த
 தமிழ்ச்செல்வன் சிலகணங்கள் தாமதித்துச்

சுமைபோன்றே அடிவருத்தக் கரங்கள்தம்மாற்
சுமந்தபடி எழுந்திருந்தான் ; குருதி கண்டான் ;
இமைப்போதில் எவராலோ விளைந்ததீமை
எண்ணினான் ; தள்ளாடி நடக்கலானான் ; 78

' குற்றமொன்றும் புரியாத நிலையில்என்னைக்
குறித்தனரே கொலைநோக்கம் ; எல்லாம் அந்த
சிற்றறிவிற் கிழவனது பணிதான் ' என்றே
சிந்தனையிற் கூட்டினனாய் அசைந்த சைந்தே
மற்றவர்கள் காணுமுன்னே மனைப்புகுந்தே
மாண்புள்ள தன்னறையில் நுழைந்து வீழ்ந்தான் ;
கற்றவன்தான் ; ஆனாலும் கசடர் தீமைக்
கணக்கதனிற் சிக்கிவிட்டான் ; உண்மை யீதாம் ! 79

❋

திட்டமிட்டான் கிழக்குமரன் ; அன்னான் செய்த
தீமையவன் உடற்பிணியால் முடுகிச் செல்லத்
திட்டங்கள் முடியுமுன்னே நோயில்வீழ்ந்தான் ;
திருவுடையான் எனினுமவை யாதுசெய்யும் ?
உட்டங்கும் அழுக்காறும் பிறவும் ஆழ்ந்து
உருக்குலைந்து உடல்மெலிந்து ஆறே நாளில்,
பெட்டகத்துப் பாம்பானான் ; செய்த தீமை
பின்னிருந்த மனச்சான்றைக் குத்தும் ; கிள்ளும். 80

' என்செய்தேன் ? இளஞ்சிறுவர் தமைப்பிரிக்க
எண்ணமிட்டேன் ; எதனால்?என் செல்வத் தாலே !
என்செய்தேன் ? இறைவா!நான் இயற்றிவிட்ட
இப்பழிக்குத் தப்புதல்தான் உண்டோ!தந்தாய் !
மின்செய்த கொடிபோன்ற மொழிக்கிள்ளைக்கு
மேலான அவனன்றோ இணையாம் ; ஆனால்
கொன்செய்தேன் ; குணங்கெட்டேன் அந்தோ ' என்று
குறுகிநின்றான் கூசினான் நெஞ்சுக்குள்ளே. 81

❋

பான்மொழியின் மனைக்கொருநாள் அந்திவேளை
பரிவுடனே வந்துநின்றான் குமரன்;கண்டு
வான்முழங்கும் இடிப்போன்று தங்கை ஏசி
வரவேற்றாள் ; "திருந்திவிட்டேன் மெய்யாய்" என்றான்;
தேன்மொழியோ திகைத்தவளாய் மாற்றங்கண்டும்
தெளிவின்றி நின்றிடுவாள் மாமன் சொல்வான் ;
"ஊன்புகுந்து உயிர்புகுந்து உணர்வி னூடு
உள்புகுந்த உன் அன்பு வெல்லும்; வெல்லும் ! 82

தமிழ்ச்செல்வ னேயுனக்குத் தகுதிவாய்ந்தோன் ;
தங்கநிகர் பண்புடையாய் ! தீவினையால்
அமிழ்தநிகர் வாழ்வினுக்கு வேம்பே யானேன் ;
ஆதரிப்பீர் ; மாறிவிட்டேன் '' என்றிரந்தான் !
'' தமிழ்போன்றே இனிக்குமுங்கள் பேச்சும்நெஞ்சும் ;
தளர்ந்திடலேன் ? மாமா ! இவ் வேழைபேச்சை
இமிழ்கடல்சூழ் உலகிதனிற் பொறுப்பீர் !'' என்றே
இருகைகள் கூப்பிவிழுந் தெழுந்தாள்நங்கை ! 83

'' மணமுடிப்பேன் ; உம்மிருவர் இல்ல றத்தின்
மாண்புடருக் கோளியீவேன் ; தங்காய் ! இந்தக்
குணமிலியை மன்னிப்பாய் '' என்று கூறிக்
கொடுவினையார் குமரன்மனங் கசிந்துநின்றான் ;
'' இணர்ப்பூவின் மணம்போலே இணைந்த தண்ணா !
இனிக்குடும்பம் '' என்றுரைத்தாள் தங்கை ; வானில்
துணையாகி நின்றிடுவிண் மீன்களோடு
தோள்கொட்டி நிலாச்செல்வன் ஆடலானான் ! 84

❋

பெருமகிழ்ச்சி பான்மொழிக்கு ; செல்வ னுக்கும் ;
பின்னிநின்ற நற்காதல் இயற்கை காட்டும்
அருவழியில் தடைநின்ற மாமன் போக்கு
அடியோடு மாறித்தம் இதயத் தன்பு
பெருவெற்றி விளைத்ததனால் ; மகிழ்ச்சி பொங்கப்
பின்னாளிற் கலந்துமகிழ்ந் தயர்ந்துபோனார் ;
பெருகுற்ற சினமாறிப் பெரிய வர்க்குள்
பேச்சுவர, மாறிநின்றார் செல்வன் தந்தை. 85

❋

திருவருளால் அன்படைந்த வெற்றி தன்னைத்
திருமுருகன் திருமுன்பு வைப்பார்போல,
திருவாவி னன்குடிக்கும் உற்றார் மற்றார்
திரளாகச் சென்றங்கே மன்றல் கண்டார் ;
பெருந்தேவர் கொடியும்சீர்க் குறப்பூங்கொம்பும்
பிணைந்திடுமத் திருமுருகன் அருளைப்பெற்றார்
நறுமலரின் மணம்போன்று தமிழைப் போன்று
நாயகனும் நாயகியும் தழைக்க லுற்றார். 86

முற்றிற்று

விக்ரக ஆராதனை

புதுடில்லி, ஏ. ஆர். ராஜாமணி

(மலர் 19 - இதழ் 9. பக்கம் 523 இன் தொடர்ச்சி)

'கடவுள் கண்ணிலுள்ளான் ; காட்சியிலில்லை' என்றபடி உபதேசித்தருளும் பெரியவர்கள் வாக்கிற்கு நேரடி உண்மைப் பொருளை நாம் ஆராய உட்புகுந்தால் கடவுட் காட்சியைக் கண்டு கண்டு கண்ணில் - அதனதன் கண்மணி விழிகளில் இருத்திக்கொண்டுவிட்டால் - பிறகு காண்பதெல்லாம் - காணும் பொருள்களிலெல்லாம் கடவுளரது கோலத்தைக் காண இயலும் என்றபடி பொருள் விரியும்.

அன்பன், விக்கிரகத்தைப் பேரவாவோடு கண்களைக் கொண்டு பருகுவான்போல் நோக்கி மனமாரச் சிந்தித்து வாயாரத் துதித்துத் தலைவணங்கி அப்படியே மனத்திற் கொண்டால் அதற்குப் பிறகு அவனுக்குக் காண்பதெல்லாம் கடவுளர் தம் காட்சியாகத் தோன்றுவது இயற்கைதானே !

''புறக்கண்ணுடன் அகக்கண்ணையும்பொருத்தி மனத்தைச் சிதையாமல் நிறுத்தி விக்ரக ஆராதனையை மேற்கொள்பவன் துதிநிலை அறிந்து தெளிந்தவனாகும்'' என்று வேதங்கள் முழக்க மிடுகின்றன. மனம் தன்னையறியாமல் ஏமாற்றிவிட்டு ஓடிப் போகும் கள்ளக் காதலியைப்போன்ற தன்மையினதாகும். மிகுந்த விழிப்புடன், எச்சரிக்கையுடன் அதை அறிந்து திரும்பி லட்சியத்தில் நிறுத்த அரும்பெரும் பிரயாசைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு வேளை பிம்பம் நன்ருகப் பதியாது மறைபடுமாயின் மீண்டும் கண்களைத் திறந்து விக்ரகத்தை உற்றுப்பார்த்துப் பின் கண்களை மூடி நன்கு பிரதிஷ்டை செய்து கொண்டு தியானித்தல் வேண்டும் என்றவாறு விக்ரக ஆராதனை வழிமுறைத் துதி நூல்கள் இயம்புகின்றன.

எதனை நினைக்கும்போதும் தன் மனம் அதனிடத்து அன்பு கூர்ந்து நோக்குகின்றதோ அதனையே இஷ்டதேவதையாகக் கொண்டு வழிபட்டுவரும் பட்சத்தில் நாளடைவில் அவ்வுருவம்

மனத்திற் பதிந்து இதயத்திலிருத்தித் தியானிப்பது சுலபமாகி விடும். இம்மாதிரி தியானிக்கப்படும் முறைகள் பழக்கப்பட்டு விட்டால் பின்னர் ஞானநிலையை அடைந்து சமாதிநிலையையும் கைவரப்பேறலாம் என்று அனுபவத்தில் கண்டறிந்த யோகிகள் கூறுகின்றனர். உண்மைதானே !

வாலிபன் வயதுகாலத்தில் பருவத்துடிப்புக் காரணமாகத் தனக்குப்பிடித்த - அல்லது - தனக்கு இசைந்த வாலைக்குமரியின் உருவப்படத்தைச் சதாசர்வகாலமும் தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு அடிக்கடி அதை எடுத்தெடுத்துப்பார்த்து அகமகிழ்கிறான். நாளடைவில் அவனுக்கு வேறொருத்தியுடன் திருமணமாகிவிட்டாலுங் கூட அப் பெண்ணின் நினைவு அகத்தில் தோன்றியெழும் உண்மையை யாரும் மறுக்க இயலாது. அதேபோன்று ஹிந்து மதத்தைப் பிறப்பால் கொண்ட ஒருவர் காலக்கிரமத்தில் பலவிதச் சூழ்நிலைகளினால் மதமாறிவிட்டாலுங்கூட தழுவிய மதச்சார்புக்குகந்தவாறு அவர் அனுஷ்டானங்களை ஏற்றுக்கொண்டு இயங்கிவருபவரா யினும், ஹிந்துமதக் கடவுளர்களின் நாம உச்சரிப்புகளை அவர் சேவிமடுக்கும்போது அந்தந்த உருவ அமைப்புகள் அவரது மனக்கண்ணில் நிழலாடுவதைத் தடுக்க இயலாது. உருவ வழிபாட்டு முறைகளில் அது மனிதர்களுக்குரியதாயினும்சரி, ஆண்டவர்களுக்குரியதாயினும் சரியே. உள்ள சிறப்பான அம்சம்இது. சுவாமி விவேகானந்தரது வீரச்சேறிவுமிகுந்த வாச கங்களைநாமறிவோம். அத்தகைய வீரவாசகங்களுக்குரியவர் யாரேன்பதைக் காணத் துடிக்கும் உணர்வு படைத்தவர்களது கண்களுக்கு ஞானத்தேளிவு மிகுந்த கண்களில் வீரப்பார்வை போலிய கைகளிரண்டையும் கட்டிக்கோண்டு நிமிர்ந்தநோக்கில் உள்ள அவரது திருக்கோலப்புகைப்படத்தைக் காணும்போழுது எவ்வளவு பூரிப்பு ஏற்படுகிறது என்பதைச் சோல்லவும் வேண் டுமா ? காந்தியாரின் சிலையும் படமும் நாடேங்கும் மதிக்கப் படுவதின் உட்கருத்தை நாம் ஆராய்ந்தால் கிடைக்கும் விடை இதுவாகத்தானிருக்கும்.

இத்தகைய காரணங்களால்தான் பேரியோர்கள் இஷ்டதே வதையை உருவமாகச்சேய்து உபாசிக்கவேண்டுமேன வழியேற் படுத்தியிருக்கின்றனர். அந்நேறி நின்று வழிபட்டு உய்வோமாக.

மனைத்தக்கமாண்புடைமை

ப. வசந்தா

மாறனாரின் மனைவி :

"மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

கொண்டவனின் புகழ்குன்றாமல் வாழ்வின் துணையாகி தன்னையும் தன்னவனையும் பேணும் புகழ் புரிந்த இல்லாளை உடையவன் இகழ்வார் முன் ஏறுபோல் பீடுநடை பயிலலாம்.

மனைத்தக்க மாண்பைப் பெற்ற இல்லவள் இருக்கும் இடத்தில் இல்லாத பொருளில்லை என்கிறார் பொய்யில்புலவர். "கற்றுவல்ல கணவர்க்குக் கற்புடையாள்போல" என்று இளம்பூரணரும் இல்லாளின் பெருமையைச் சுட்டுகின்றார்.

மனைத்தக்க மாண்புகளாவன : துறந்தார்ப் பேணல், விருந்தயர்தல், வறிஞர்மாட்டு அருளுடைமை என்பன.

"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை"

என்றவாறு "துறந்தார்ப்பேணல்" என்ற அறத்தையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட மாறனாரின் மனைவியைக் காண்போம்.

இளையான்குடி என்ற ஊரில் வேளாள நற்குல வழிவந்த மாறனார் என்னும் பெருந்தகையாளர் ஆண்டவனின் அடியார்களுக்கு வழிபாடு செய்துவருகின்றார். ஆம் - அன்பு புனைந்த தலைவனின் அன்பர் யாவர் வந்தாலும் வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி, பாதம் விளக்கி, உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத் திறத்தினில் அளிப்பார்.

'' படமாடக் கோயில் பரமற்கோன் றீயில்
நடமாடுங் கோயில் நம்பற்கங் காகா
நடமாடுங் கோயில் நம்பற்கோன் றீயில்
படமாடுங் கோயில் பரமற்கங் காமே '' (திருமந்திரம்)

என்பதை ஒட்டி ஆளும் நாயகர் அன்பரானவர் அளவிலார் உளம் மகிழச்செய்தார். இங்கிலேயில் குபேரனை ஒத்த செல்வரானார்.

செல்வம் நிறைந்த நாளில் அடியார் பூசை செய்தல் சிறப்பில்லே. அல்லல் நல்குரவு ஆனபோதிலும் வல்லர் என்று உலகோர்க் கறிவிக்க மல்லல் நீடிய செல்வத்தை மெல்ல மறையச்செய்தார். வளஞ்சுருங்கிய காலையினும் மனஞ்சுருங்குதல் இன்றி மாறில் திருப்பணிக்கண் முதிர்ந்த கொள்கையரானார்.

இங்கிலேயில் இறைவன் இவரைச் சோதிக்க எண்ணி மாரிக் காலத்து இரவில் இவரின் வீட்டைத் துறவியின் வேடத்தில் சென்று அடைந்தார். மனைவியாரும், தானும் உணவின்றி இருந்த அன்றைய இரவிலும்கூட துறவியாரை எதிர்கொண்டழைத்து ஈரமேனியை நீக்கி இடம் கொடுத்தார்.

மனைவியைநோக்கி மாறனார் நமக்கு முன்பு இங்கு உணவிலே எனினும் இமக்குலக்கொடி பாகற்கினியவர் தமக்கு நாம் எவ்வாறேனும் திருவமுது படைத்தேயாகவேண்டும் என்ன செய்யலாம் என வினவினார்.

மாண்புடைய அந்த மலேயரசியும் செய்வதறியாது திகைத்துப் பின்,

'' செல்லனீங்கப் பகல்வித் திய செந்நெல்
மல்ல னீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலு மாகுமற்
றல்ல தோன்றறி யேனென் றயர்வுற ''

மாற்றம் செவியுற்ற மாறனார் இழந்த செல்வத்தை மீண்டும் எய்தினாற்போன்று மனமிக மகிழ்ந்து மைக்குழம்பு போன்ற அந்த நள்ளிரவில் புள்ளுறங்கும் வயலுக்குச் சென்றார்.

காலினாற் தடவிச்சென்று கைகளால் நீர்வழிச்சார்ந்த வெண் முளைகளை இடாநிறையக் கொண்டு எடுத்துவந்தார்.

" வித்தும் இடல் வேண்டுங்கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம் "

என்ற வள்ளுவரின் வாக்கை அவர் செயல் நமக்கு நினைவூட்டு கின்றது.

வயலிலிருந்து வந்தவரிடம் அடுப்பில் மாட்ட விறகில்லை என்றதும் மனையின் அலக்கினை அறுத்து வீழ்த்தினார். அடுத்துக் கறிக்கு என்னசெய்வது என்ற எண்ணம் எழுந்ததும் கொல்லை யில் சென்று குழிநிரம்பாத புன்செய் குறும்பயிர் தடவிப் பாசப் பழிமுதல் பறிப்பார்போலப் பறித்தவை கறிக்கு நல்கினார்.

" மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிகளாய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத்திரத்துக் கைமை
வினையினில் வேறுவேறு கறியமுதாக்கிப் பண்டை
நினைவினாற் குறையை நேர்ந்து திருவமுதமைத்து நின்றார் "

திருவமுதமைத்த பின் உணர்வினால் உணர ஒண்ணா ஒருவரை உணர்த்த வேண்டி அவர் துயிலகற்றலுற்றார். மாறனார் " அடியவரே திருவமுது செய்ய எழுந்தருள்க " என்றபோது அடியவர் சோதியாய், ஏலவார்குழலி தன்னோடு இடபவாகன ராய்த் தோன்றச் செழுந்திரு மனைவியாரும் தொண்டனாரும் திகைத்தனர்.

" அன்பனே அன்பர் பூசை அளித்த நீ யணங்கினோடு
மென்பெரு முலக மெய்தி யிருநிதிக் கிழவன்தானே
முன்பெரு நிதியமேந்தி மொழி வழி யேவல் கேட்ப
இன்பமார்ந் திருப்பீ ராமென் றருள்செய்தா னெவர்க்கு மிக்கான்"

இவ்வாறு தற்கொண்டவனின் குறிப்பறிந்து அவனது வாழ்வை வளமிக்க சோலையாக்குபவளே வாழ்க்கைத் துணையாவாள். இப் பண்பிலே நிறைவுற்று மனைத்தக்க மாண்பிற்கு இலக்கியமானார் மாறனாரின் மனைவியார்.

சவுந்தரியந்தாதி

பவளக்கொடி அடிகள்

(மலர் 19, இதழ் 11, பக்கம் 624 இன் தொடர்ச்சி)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தேனின முண்டெழு சீரிசை வண்டுகள்
மோதுக ருங்குழன் மாதேஎன்
னூனினு டம்புயி ராகி வந்தரு
ளோருரை யின்பொரு ளோதாயே
ஞானச வுந்தரி மோனசு கந்தரு
நாரணி பஞ்சமி நாயேனைத்
தானினி வந்தரு ளாயெனி லிங்கொரு
தாபர மொன்றிலை மாதாவே. 65

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வேயூ துங்கனி மாமா யன்றுணை வேலாருங் கணியே
வாயூ துங்கன லேதோ முந்தியு மாமுலங் குகையாய்
நீயூ துங்கரி தீமு ளும்படி நேரேவந் தருளா
தாயீ சங்கரி மாயா விஞ்சகி யாளாயென் குருவே. 66

தரவு கொச்சகக் கலிப்பா

குருபோத கமுருவே யுறியகுகைவிட் டெழுகுளவி
சொருபாவ கமுறுபோ தகமேதுநீ யதுசொல்வாய்
கருபோத ணையொழியா வருள்கருணை கரவமுதே
யொருபோதி னுமறவா துணையிணையா துறையிறைவி 67

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இறைவியுன் பதமே போற்றி யென்னையீன் றருள்வாய் போற்றி
மறலியை முனிந்தாய் போற்றி மகிடனைத் தொலைத்தாய் போற்றி
குறைவிலா நிறைவே போற்றி கொடும்பகை சிதைத்தாய் போற்றி
அறமிக வளர்த்தாய் போற்றி யன்னையே போற்றி போற்றி. 68

போற்றியே மூலா தாரப் பொன்னடி மலரே போற்றி
போற்றியே மனமும் வாக்கும் போன்றிட முளைத்தாய் போற்றி
போற்றியே நமச்சி வாயப் பொருளிலே புணர்ந்தாய் போற்றி
போற்றியென் னுமையே ஞானப் பொங்கொளி விளக்கே போற்றி

போற்றியென் னகத் துள்ளே பொருந்திய பொருளே போற்றி
போற்றியென் னம்மை யெல்லாம் பொலிவுற வமைத்தாய் போற்றி
போற்றியென் னப்பன் பங்கிற் புகுந்திடுங் கிளியே போற்றி
போற்றியென் றுரியா தீதப் பூங்கொடி மயிலே போற்றி. 70

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

போற்றிக் கசிந்துருகி வாழ்த்திப் புகழ்ந்துனது
பூத்துச் சிவந்த பதமே
தோற்றிப் பணிந்தேனது சோற்றிச்சை மண்டியெழு
தூக்கத் தையென் றேழிவனே
நாற்றிக் குமெண்டிசையு மேத்தித் தொழும்பரம
மூர்த்திக்கு நங்கை யிடமாச்
சாற்றிக் கிடந்தமறை பார்த்துப் புலம்பியது
தாய்க்குத் தகும்ப ணியதோ. 71

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பணியுந் தவத்தோர் பலதுயரைப் பறியக் கிழிக்கும் வேற்கண்ணு
யணியா வரவம் பலபூண்ட வரனுர்க் கினிய திருமனையே
மணியங் கடந்த திருவடிவே மாலுக் கிளைய மடமயிலே
பிணியன் றுயரை யறுத்தெனையுன் பிரியக் கடலுட் செறித்தருளே

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

செறிக்கும் பதங்கள் குறிக்குந் திறங்கள்
செலுத்துந் தவங்க ளுணரேனே
கறிக்குஞ் சிறந்த புசிப்புங் குடும்பக்
களிப்பும் புணர்ந்த கடையேனே
பொறிக்குஞ் சிலம்பு தெரிக்குந் தடங்கொள்
பொருப்பன் புணர்ந்த புயல்மேனி
யெறிக்குஞ் சிவந்த மணிப்பங் கிழைந்த
விடத்துந் தொடர்ந்த மடமானே. 73

(தொடரும்)

கழிந்த இளமை

வித்துவான். ப. நீலா

எழில் நிறைந்த நமது இளமை என்றும் நிலைப்பதில்லை. இளமையை வரவேற்கும் நமது உள்ளத்தினுல் ஏனோ முதுமையை வரவேற்க முடிவதில்லை. இளமையில் எண்ணக்கூடிய எண்ணங்கள் செய்யக்கூடிய செயல்கள் இவைகளை முதுமையில் எண்ணவும், செய்யவும் இயலுவதில்லை. சென்ற இளமையை நினைந்து ஏங்கி இரங்குவது ஒன்றுதான் முதுமையில் செய்யக் கூடிய செயல். நம் தமிழ் இலக்கியங்கள் சாவா இளமை படைத்தவைதான். ஆனுல் அதில் வருகின்ற தலைமக்கள் நம்மினும் வேறுபட்டவரல்லர். ஆகவே அவர்களுள் முதுமை எய்தியவர்கள் ஒரு சில சமயம் தங்களின் இளமையைப்பற்றி எண்ணுகின்றுர்கள். அல்லது எண்ணவைக்கப்படுகின்றுர்கள். இளமையைப்பற்றி நாலடியாசிரியர் ஒருவர்,

"பனிபடு சோலைப் பயன்மரம் எல்லாம்
கனிஉதிர்ந்து வீழ்ந்தற்று இளமை" (நாலடி-இளமை. 7)

என்கிறுர். கனி உதிர்ந்து வீழ்வது போன்ற இந்தக் கல்லா இளமைபற்றி - இதோவருகின்ற இந்தக் கிழவரிடம் கேட்போம். கிழவரின் கையிலே 'தோடித்தலை விழுத்தண்டு' ஒன்றுள்ளது. வாய் இருமலுடன் சேர்ந்த சில சொற்களைப் பேசுகின்றது. ஆனுல் இந்த முதுமையிலும் இளமை நினைவு அவர் உள்ளத்தில் வளமையுடன் பதிந்துள்ளதே.

மறை என்பதை அறியாத இளையமகளிருடன் நீர்த்துறையில் விளையாடி - குட்டத்துள் 'துடும்' எனப் பாய்ந்து குளித்து மணல் முகந்து காட்டிய கல்லா இளமை கழிந்தது. இன்று நடக்கவே தண்டு ஒன்று தேவைப்படுகிறது. பேசநினைக்கின் இருமல் தடைசெய்கிறது! இனி சென்ற இளமை என்றுதிரும்பும்! என்று ஏங்குகிறுர். இக்காட்சி புறநானூற்றில் 243 ஆவது பாடலில் வந்துள்ளது.

தலைவியரும் இதற்கு விலக்கல்ல. ஒரு தலைவி தனது காதலனைப்பற்றி எண்ணி - அவன் இன்னும் வரைந்து கோள்ளாமல் இருக்கின்றானே என்று வருந்துகிறாள். அதனால் உள்ளம் ஒப்பனையில் ஒட மறுக்கிறது. போலிவிழந்துவரும் அவளின் பேரழகு தலைவனுக்குமேயன்றி அவளுக்கும் பயன் படாமல் கழிகின்றது. ஆனின்பால் கன்றுக்கும் பயன்படாமல், கலத்தினும் படாமல் வீணே நிலத்தில் பட்டு அழிவதுபோல அழகு அழிகிறது என்கிறாள்.

" கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்கு
எனக்கு மாகாது என்னைக்கு முதவாது
பசலை உணீஇயர் வேண்டும் " (குறுந். 27)

என்கிறாள். இந்த உலகில் கழிந்த இளமையை மீட்டுத்தருநரும் உண்டோ? என்ற அறைகூவல் அகத்தில் எழுகிறது.

போருள் காரணமாகத் தலைவியைப் பிரிய எண்ணிய தலைவனின் உள்ளத்தில் தலைவியின் இளமையழகு தோன்றுகிறது. உடனே எண்ணுகின்றான்; உலகத்தாரால் கழிந்த இளமை பற்றி கவலைப்படமுடியுமே அன்றி அதனை மீட்டுத்தரமுடியாது. ஆகவே தலைவியைப்பிரிந்து தேடும் போருள் வேண்டாம் என்று துணிகின்றான்.

" ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்து
ஆராக் காதலோடு தாரிடைக் குழையாது
சென்றுபடு விறற்கவின் உள்ளி என்றும்
இரங்குநர் அல்லது பெயர்தந் தியாவரும்
தருநரும் உளரோ இவ்வுலகத் தானென " (அகம். 75)

எண்ணிப் போருள்தேடும் முயற்சியை விடுகின்றான். கற்றோர்கள் ஏத்தும் கலித்தோகையில் ஒரு தோழி,

" முளைநிரை முறுவலார் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையும் தருவதோ இறந்ததன் பின்னே" (பா. கலி. 15)

என்று எடுத்துக்கூறி தலைவனைச் செலவழுங்குவிக்கிறாள்.

" இளமையும் காமமும் நின்பாணி நில்லா " (பா. கலி. 12)

" தகைவண்டு புதிதுண்ணத் தாதவிழ் தண்போதின்
முகைவாய்த்த தடம்போலும் இளமையும் நிலையுமோ "

(பா. கலி. 17)

" யாறுநீர் கழிந்தன்ன இளமை " (பா. கலி. 20)

இவ்வாறு இளமையின் தன்மையை நமக்கு உணர்த்துகின்றார்கள். ஒரு புதியதிருப்பம்; இளமை நிறைந்த இருவர் இளமையை மறந்து வாழ்ந்த வரலாறு.

" ஏதிலார்போல நோக்கி யெம்மை என்றதனுன் மற்றை
மாதரார் தம்மை என்றன் மனத்தினுங் தீண்டேன் "

என்று சபதம் செய்து மணவியைத் தீண்டாமலேயே வாழ்ந்த பெருமை படைத்தவர் திருநீலகண்டர். ஆனால் இவர்களின் இந்தநிலை அயலாருக்குத்தெரியாது. இல்புறம்பு ஒழியாமல், இருவரும் வேறு வைகி, அன்புறு புணர்ச்சியின்மை அயலறியாமல் வாழ்ந்தார்கள். இப்படி இளமையைப் புறக்கணிக்கும் துணிவு எல்லோருக்கும் கைவராது. மேற்கரும் இளமையைப் பெற்றஞான்று செயற்கரும் செயல்கள் பல செய்து உலகத்தவர் போற்ற வாழவேண்டும். 'இளமையிற்கல்' என்ற முதுமொழி கூட இளமைப்பருவத்தில் படித்தால் மறக்காது என்பதை அறிவுறுத்துகின்றது. ஆகவே இளமைக்காலத்தை நல்வழியில் செலுத்தி உயர்வைப் பெறுவோமாக !

மதிப்புரை

சிவமகோத்ஸவசங்கிரஹம்

உத்ஸவத்திற்குரிய 36 அங்கங்களையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் கிரந்தலிபியில் அச்சிடப்பட்டிருக்கும் சுந்தரமூர்த்தி வெளியீடு. ஆகமங்களும் பத்ததிகளும் க்ஷீணமடைந்துவரும் நாளில் இம்மாதிரி நூல்களை அச்சிடுவது சங்கத்தின் உயரிய நோக்கத்தைப் புலப்படுத்துகிறது. த்ரு த்ரூ இவ்வெழுத்துக்களைக் கவனித்தும், சுலோகங்களைப் பாதமாகப்பிரித்தும் அச்சிடுவது நன்மை பயக்கும். விலை 2 ரூபாய். ஆயினும் 5 ரூபாய் அனுப்பினால் மேற்படி சங்கத்தின் ஆறு வெளியீடுகளையும் தேவகோட்டை சிவன்கோயில் தெரு மு. சங்கர பட்டரிடம் தபால் மூலம் பெறலாம். மேலும் இம்மாதிரி நூல்களை அச்சிட உதவியதாகவும் ஆகும்.

—K. இராஜகோபால சாஸ்திரி.

வினைச்சொற்றிறம்

முதுபெரும்புலவர்
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

(மலர் 19, இதழ் 12, பக்கம் 706 இன் தொடர்ச்சி)

இலக்கணக்கொத்துரையாசிரியரும் 'முற்றீரெச்சம்' (67, 68, 78) என்புழியும் 'இருவகை முற்றும் ஈரெச்சமாகலும் இருவகையெச்சமும் முற்றேயாதலும்' (82) என்புழியும் நன்னூலார் கருத்துக்கு மாறுபட்டும் வேறுபட்டும் கூறினாரல்லர். அவற்றின் உரைகளைக் கூர்ந்துநோக்கின் அவ்வுண்மையை அறியலாம். ஆண்டு, அவர் அம்மூன்றனுள் ஏதேனும் ஒன்றற்குத் தெரிநிலை குறிப்பு என்னும் பாகுபாடுகொண்டு ஏனைய இரண்டற்கும் கொள்ளாது கூறும் மடம்பட்டாரல்லர். அது படற்பாலரும் அல்லர். சங்கரநமச்சிவாயர்க்கும் ஆசிரியர் அவர்.

நன்னூலார் தெரிநிலை குறிப்புவினை என்றிருவகையாயும், முற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்று மூவகையாயும், அவற்றை அத்தெரிநிலை குறிப்புக்களாற் இவ்விருவகைப்படுத்து அறுவகையாயும் அன்றி வேறு எவ்வகையாயும் கூறக்கடவர் அல்லர். கூறினர் ஆயின், அவரை இலக்கண நூலாசிரியராக வும் அவர் நூலை நன்னூலாகவும் அறிஞர் கொள்ளார். இதனை உளங்கொண்டு, இத்திறத்தை ஆய்தல் இலக்கணம் உணர்ந்தார் கடனாகும். நன்னூலிற் பிழையுண்டேனல் வெளிப்படை. அதில் எல்லாம் பிழை என்றல் அறிவிற்குப் பொருத்தம் அன்று.

இலக்கணக்கொத்துரை யாசிரியர், இந்நன்னூலாசிரியரை 'முக்குணவசத்தால் முறைமறந்தறைவர்' என்றதற்கு எடுத்துக் காட்டாக, 'அன்றியின்றியென் வினையெஞ்சிகரம்' தொடர் பினுள் உகரமாய்வரின் இயல்பே என்ற முறையை மறந்து, 'வினைமுற்றே வினையெச்சமாகலும்' என்றார். 'வினையெச்சமே வினைமுற்றாகலும்' என்னல்வேண்டும். அதுவே முறைபிறழாமை எனக்காட்டினர்.

இஃது எல்லார்க்கும் போது. அவர்க்கும் உள்ளதே. 'பிறர் நூற்குற்றங்காட்டல்' எளிது. தன்னூற் குற்றம் உணர்தல் எளிதன்று. தொல்காப்பியர், 'வாரா மரபின வரக் கூறுதலும் என்னு மரபின எனக் கூறுதலும்' என்று இருவேறு பன்மை கூறிப் பின்னர், 'அன்னவை எல்லாம்' என்று அப்பன்மை யிரண்டனையும் தொகுத்துக்கூறி, அதன்பின்னர், 'அவற்றவற் றியல்பான் இன்ன என்னும் குறிப்புரையாகும்' என்றார். அதில் 'அவற்றவற்று' என்று இருமுறை வந்தமை தவறன்று. முதலாவது 'வாராமரபின' என்னும் பன்மையைச் சுட்டும், இரண்டாவது 'என்னுமரபின' என்னும் பன்மையைச் சுட்டும்.

"இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே"

என்றதில் 'அவற்றவற்று' என்று இருமுறை கூறியது பொருந்துமோ? ஏழு நெடிலையும் 'அவற்று' என்று ஒருமுறை சுட்டுதலே அமையும். 'அவற்றவற்று' என்று இருமுறை சுட்டியது வீணன்றோ? அதனதன் இனக்குறில் என்று இருப்பின் நன்றாகும். இது குற்றமா? அன்று? இத்தகைய பிழைகளை நோக்கி நூலை இகழ்தல் அறிவிற்கொல்லாது.

நன்னூலார் தாம்கொண்ட அறுவகை வினைச்சொற்றிறத்தையும், முற்கூறியவாறு இருவகையாயும் மூவகையாயும் கூறலாமே அன்றி நால்வகையாகக் கூறுதல் குற்றம்.

(152) 'ஈரெச்சம் முற்று'

(374) 'முற்றீரெச்சம்'

(322) 'முற்றும் பெயர்வினை யெச்சமும் ஆகி' இம்மூன்றிடத்தும் நன்னூலார் கொண்டவகை ஒன்றேயன்றி வேறன்று. அது மூன்றுவகை என்பதே. எவ்வாறு அதைக் காண்டல் கூடும் எனின், இம்மூன்றனுள் முதல் ஈரிடத்தும் உம்மையின்றி, நிற்றலையும் அவற்றைக்கொள்ளுமாறு இவ்வாறு என்பாராய், உம்மை கொடுத்து (1) முற்றும் (2) பெயர் (எச்சமும்) (3) வினையெச்சமும் என்று முத்திறத்தைப் புலப்படுத்திய வாற்றால் காண்டல் கூடும். இக் கைப்புணுக்குக் கண்ணாடியும் வேண்டுங்கொல்?

அறுவகை வினைச்சொற்றிறத்துள், குறிப்புப் பெயரெச்சமும் குறிப்பு வினையெச்சமும் சிறுபான்மைய ஆதலின், அவற்றைக் கொண்டு கூருது பிறநான்கனையுமே கொண்டு கூறினார் என்று எழுதினார் ஒருவர். (தமிழ்ப்பொழிலில்).

வகைசெய்கின்றுழி, ஒன்ருயினும் சிலவாயினும் பலவாயி னும் தனிவகையுட்படின், அவற்றின் ஒருமை சின்மை பன்மை களை நோக்கி, ஒருமை சின்மை யொழித்துப் பன்மையைமட்டும் கொண்டு வகைசெய்தல் மரபன்று.

தமிழில் உயிர் மெய் ஆய்தம் என்னும் எழுத்துக்களின் ஒலியுண்மையை அறிந்த தொல்காப்பியர், அவற்றின் ஒலி வேறு பாட்டை உணர்த்தவேண்டுழி, 'ஆய்தம்' ஒன்றுதானே என்று எண்ணி, (அதன் ஒருமையை நோக்கி) அதனைத் தனிவகைப் படுத்தாமல் ஒதுக்கினார் அல்லர்.

உயிரொலியை உயிர்த்தல் என்றும், ஒற்ருெலியை ஒற்றல் என்றும் கூறியவாறு ஆய்தவெழுத்தின் அஃகொலியை அஃகல் என்று தனியே கூறியதுணர்க.

(1) "புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுருவாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனைஉயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீரியல வுயிர்த்த லாறே"

(2) "ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்"

"முன்என் கிளவி முன்னர்த் தோன்றும்
இல்என் கிளவி மிசை றகரம் ஒற்றும்"

"ஒற்றிய தகரம் றகரம் ஆகும்"

"ஈறுமெய் கெடுத்து மகரம் ஒற்றும்"

(3) "உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா
ஆய்தம் அஃகாக் காலையான"

இவ்வாறு தமிழெழுத்தொலிவகை மூன்றனையும் கூறிய தொல் காப்பியர், ஒருமையைநோக்கி ஆய்தவொலியைத் தள்ளியிருக் கலாமே!

நன்னூலாசிரியர், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், நுகரமொழிமுதல் முதலியவற்றைச் சார்பெழுத்து வகையுட் சார்த்துப் பத்தென்றார். சிறுபான்மையன என்று தள்ளிவிட்டால், பத்துவகையைக் குறைத்துக்கூறலாமே!

'ழகரவீறு முன்னிலைவினை ஏலாமையின் உதாரணம் காட்டிற்றிலம்' என்று உரையெழுதும் நிலையில் வைத்துவிட்டார் நன்னூலார்; 'ஆவியரழவிறுதி முன்னிலைவினை ஏவல்முன் வல்லினம் இயல்போடு விகற்பே' என்னும் நூற்பாவில், ழகரத்தைச் சிறுபான்மை என்று தள்ளாது சேர்த்துவிட்டார்.

(தொடரும்)

துர்க்காம்பிகை துதி

தமிழ்மறை இசைமணி

வைத்தீசுவரன்கோயில், க சொக்கலிங்கம்.

இராகம் - குந்தலவராளி] [தாளம் - ஆதி

பல்லவி

அம்பா நீயே - அருள்செய்வாயே — துர்க்கை (அம்)

அனுபல்லவி

நம்பியே வந்தேன் நாளும் உன்னடியே
நலமேதரும்உலகம் நாயகிதாயே (அம்)

சரணம்

சங்கரி மீனுக்ஷி தர்மஸம்வர்த்தனி
தருமை நகருறை மகிழாசுரமர்த்தனி
மங்கள ஸ்வரூபிணி மனோன்மனிகல்யாணி
மாலினி நீலினி மாதங்கி சூலினி (அம்)

திரிபுரசுந்தரி திருமால்சகோதரி
தேவீபரமேஸ்வரி தீனதயாபரி
வரந்தரும் பதினெண் கரமுடைவல்லி நீ
மாகாளி சாமுண்டி வாணி மகமாயி நீ (அம்)

தருமையாதீன வெளியீடுகள்

வித்துவான். வி. சா. குருசாமி தேசிகர்

(மலர் 19, இதழ் 12, பக்கம் 694 இன் தொடர்ச்சி)

(மலர் 19, இதழ் 12, பக்கம் 694 இன் தொடர்ச்சி)

எண் 23 பண்டாரமும்மணிக்கோவை

இயற்றியவர்: ஸ்ரீமத். குமரகுருபர சுவாமிகள். வெளியிட்டோர்: தருமையாதீனம் 24 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி, வித்துவான், ஸ்ரீமத். சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எழுதிய குறிப்புரையுடன் ஸ்ரீமத். அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் வெளியிடப் பட்டது. முதற் பதிப்பு 1937. இரண்டாம் பதிப்பு தருமை யாதீனப் புலவர், வித்துவான், திரு. ஔவை. சு துரைசாமிப் பிள்ளை அவர்கள் ஆராய்ச்சியுடன் கூடியது. 1943. மூன்றும் பதிப்பு 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி வெளியிடப்பட்டது.

குமரகுருபரர்: நெல்லைமாவட்டத்தைச் சேர்ந்த கயிலாய புரத்தில் வேளாண் குலத்தில் சண்முகசிகாமணிக் கவிராயரும் சிவகாமியம்மையாரும் செய்த தவப்பயனாய்த் தோன்றியவர்கள் இவர்கள். ஐந்தாண்டுவரை வாய் பேசாதிருந்து செந்திற் குமரன் திருவருள் பெற்று முதன்முதலிற் கந்தர் கலிவெண்பா என்ற தெய்வத் தமிழ்நூல் பாடித் திருவாய் திறந்தருளினார்கள். முருகன் அருள் பெற்று ஞானாசாரியர் ஒருவரை நல்கவேண்டிக் குறையிரக்க முருகப்பெருமான் 'உன் வாக்குத் தடைப்படும் இடமே ஞானாசாரியபீடம்' என்று அருளிச் செய்ய, சுவாமிகள் பல தலங்களையும் தரிசித்துத் தமிழ்ப் பனுவல்கள் பல செய்தருளி மதுரை அங்கயற்கண்ணி அம்மைமேல் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் பாடி அம்பிகையால் முத்தாரம் அளிக்கப்

பேற்றும் மதுரையில் திருமலைநாயக்கர் அளித்த முற்றூட்டு களையும், விருதுகளையும் பெற்றுக்கொண்டுத் தருமை வந்தடைந் தார்கள். தருமையாதீனத்தில் அப்போழுது நான்காவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளைத் தரிசித்தபோழுது அவர்கள் 'ஐந்து பேரறிவும் கண்களே கோள்ள' என்னும் பேரியபுராணத் திருப்பாடலுக்கு அனுபவப் போருள் கேட்க சுவாமிகளுக்கு வாக்குத் தடைப்பட்டது. முருகன் அருளிய அசரீரி மோழி நினைவு வர அடியற்ற மரம்போல் அவர்கள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஞானசிரியரை உணர்ந்து வழிபட்டார்கள். பின்னர்க் குருவாணைப்படித் தலயாத்திரையாகப்புறப்பட்டவர்கள் வேளூர், சிதம்பரம் முதலிய தலங்களுக்குச் சென்று பாடிப்பரவி மீண்டும் தருமை வந்து பண்டாரமும்மணிக்கோவை என்னும் பாமாலையால் தம் குருநாதரைப் புகழ்ந்து போற்றியருளினார்கள். பின்னர்க் காசி சென்று டில்லி நவாபிடம் திருஅருட்டிறம் காட்டிக் காசியில் திருமடம் நிறுவிச் சைவமும். தமிழும் கங்கைக் கரையில் வளரச்செய்தருளினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத். குமரகுருபர சுவாமிகளுடைய வழிநின்று இன்றும் விளங்கிவருகின்றது. இவர்களுடைய விரிவான வரலாறு தமிழுலகம் நன்கறிந்ததேயாகும். காலம் கி. பி. 1625 - 88.

பண்டாரமும்மணிக்கோவை : தமிழில் உள்ள 96 வகைப் பிரபந்த நூல்களில் மும்மணிக்கோவையும் ஒன்று. அகவல், வேண்பா, கட்டளைக்கலித்துறை என்னும் மூன்று வகையான முப்பது பாடல்களால் அந்தாதித்தோடையமையப் பாடப்படுவது. இந்நூலில் பாட்டுடைத் தலைவராக ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் பாராட்டப்படுவதால் மகாசந்நிதானங்களுக்குப் போதுவாக வழங்கும் பேயரால் இந் நூல் பேயர் அமைந்தது. இந்நூல் சிறந்த குருவணக்கப் பாமாலையாகும். ஞானசாரியரிடத்து ஞானஉபதேசம் பேறுதல் வேண்டுமேன்னும் வேட்கையால் இந்நூல் பாடப்பட்டதாகும். திருஞானசம்பந்தரையும் குருஞானசம்பந்தரையும் ஒருவர் என இந்நூல் இயைத்துக்கூறுவது போற்றத்தக்கது.

" அமண் மாசறுத்த கவுணியர் பேருந்தகை
பிள்ளைமை வீடுத்த தள்ளரும் பருவத்து

உள்ளதன் வடிவம் உணர்த்துவ கடுப்ப
மாநிலத் தமர்ந்த ஞானசம் பந்தன் ''

ஞானம் என்னும் பெண்ணுக்குச் சைவம் சீரிய அருங்கலம். அவ்வருங்கலத்தின் நடுநாயகமணி மாசிலாமணி' என்று தம் குருநாதரைப் பாராட்டும்முறை மிக அழகானது. பெருமான் மானுடச் சட்டை தாங்கி நீலகண்டம்மறைத்து மாசிலாமணியாய் எழுந்தருளியிருக்கும் திறமும் குருநாதரை உழவராய் உருவகம் செய்யும் முறையும் அருமையான பகுதிகள். சிந்தாமணி கருதிய ஒன்றையே நல்கும் இம்மணி கருத்திற்கெட்டாப் பேரின்ப வாழ்வையும் பெறுவிக்கும் என்பன போன்ற பாடல்கள் பல போற்றத்தக்கவை.

'' பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
பரிகலம் மாந்தியிப் பவக்கடல் உழக்கும்
வரனுடைய ஞமலி யாகிநின்
அருளையும் அயராது அவதரிப் பதுவே ''

என்னும் பாடற்பகுதி சுவாமிகளின் குருபக்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

இந்நூலின் பின்னுள்ள மூன்று பாடல்கள் இம் மும்மணிக் கோவையின் பெருமையைப் புலப்படுத்துவன.

'' தடுத்த பிறவித் தளையாம் விலங்கு தனைமுறிந்து
விடுத்த கருணைக் கடல்மாசி லாமணி மெய்ப்புகழால்
தொடுத்த தமிழ்மும் மணிக்கோவை நித்தம் துதிக்கவல்லார்
எடுத்த சனனத்தில் எய்தாத பேரின்பம் எய்துவரே ''

எண் 24. இந்துமத பாலபாடம்

இயற்றியவர் : திருவாவடுதுறையாதீனம் மகாவித்துவான், பண்டிதபூஷணம், நாகர்கோயில் திரு. கே. ஆறுமுகநாவலர் அவர்கள். வெளியீட்டோர் : 24 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படித் தருமையாதீனப்புலவர், காழி. திரு. சிவ. கண்ணுசாமிப்பிள்ளை B. A. அவர்களால் வெளியிடப் பட்டது. முதற் பதிப்பு 1937. இரண்டாம் பதிப்பு 25 ஆவது

மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப் பாங்கின்படி வெளியிடப்பட்டது 1949.

ஆறுமுகநாவலர்: நாகர்கோயிலில் பிறந்து நாடறிந்த நல்லறிஞராய் விளங்கும் இவர்களைச் சமய நல்லுலகம் நன்கு அறியும். இவர்கள் சைவசமய வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டாற்றி வருகின்றவர்கள். சமய சாத்திர தோத்திர நூல்களின் அரிய பொருள்களை எளிதில் எல்லோரும் உணரும் வண்ணம் விரித்துரைப்பதில் வல்லவர்கள். "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழிவதாம் சொல்" என்னும் குறள்மொழிக்கேற்ப விளங்கும் இவர்கள் நாவன்மை யைப் போற்றுதவசில்லை. கிறிஸ்துவம்போன்ற புறச்சமயத்தவர் பலர் இவர்களுடைய சொற்பொழிவுகளைக்கேட்டுச் சைவர்களாக இன்றும் மதம் மாறிவருகின்றனர். 'தொண்டன்' என்ற சமய இதழ் நடத்தியும் சமய உண்மை விளக்கக் கட்டுரைகள், நூல்கள் முதலிய எழுதியும் சமயத் தொண்டாற்றிவருகின்றவர் கள். திருவாவடுதுறையாதீன மகாவித்துவான், பண்டித பூஷணம் போன்ற பல சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர்கள்.

இந்துமத பாலபாடம்: 'பிறவுயிர் வருந்துவதைக் கண்டு வருந்துகிறவனே இந்து எனப்படுபவன். எவ்வுயிரிடத் தும் அன்பு செலுத்தவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்ட மதமே இந்துமதம் எனப்படும். இந்துமதம் என்பதற்கு அன்புமதம் என்று பொருள். நாட்டின் பெயரையோ ஆற்றின் பெயரையோ கொண்டு வழங்கும் சொல்லல்ல இந்து என்பது' என்று இந்நூலில் இந்துமதத்தைப்பற்றிய நூலாசிரியர் தரும் விளக்கமே அமையும் இந்நூற்பெயரை விளக்க. சைவம், வைணவம் இரண்டுமே இந்துமதங்கள். இவற்றுள் சைவ சமயத்தின் உண்மைகளை விளக்கிக்கொள்வதற்கு இந்நூல் பெருந் துணையாகும். சிறுவர்களும் படித்தறியும் வகையில் பாலபாடமாக எளிய நடையில் எழுதப்பெற்றுள்ளது இந்நூல். கடவுள், இந்துமதம், திருவுருவங்கள், கடவுளை அடையும் வழிகள், ஆலயம், சிவலிங்கம், மூர்த்திகள், திருவிழாத்தத்துவங் கள் போன்ற 21 தலைப்புக்களில் 248 வினாக்களை எழுப்பிக் கொண்டு விடை கூறும் முறையில் நூல் அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம் திரு. ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய சைவ விஞவிடை, பாலபாடம் போன்ற நூல்களின் அமைப்பில் விளங்கும் இந்நூல் சமய வெளியீடுகளில் மிக்க பயனுடைய நூலாகும்.

கண்ணால் காணமுடியாத கடவுள் ஒருவர் உண்டா? உண்டென்று நம்புவதெப்படி? கடவுளை நாம் ஏன் வணங்க வேண்டும்? கோயில்கள் எதற்கு? கடவுளுக்குத் திருமணம், அவருக்குப் பள்ளியறை ஏன்? என்பன போன்ற இக்கால இளைஞர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடையளித்து அவர்களுக்கு அறிவுத்தெளிவு வழங்குவது இந்நூல். சமய உண்மைகளை உணர்வதற்கு இந்நூல் பெரிதும் பயன்படுவதாகும்.

(தொடரும்)

மதிப்புரை

அபிராமி அந்தாதி (தெளிவுரை)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு; சார்வரி ஆண்டு விஜயதசமி (30—9—60). உரையாசிரியர்:- திருமுறைக் கலைஞர், வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார். பக்கங்கள் 90. விலை 50 நயேபைசா.

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களது நூல் வெளியீட்டுத் திருப்பணிகளில் இஃது ஓர் அரும்பணியாகும். இதன்விற்பனைத்தொகையை ஸ்ரீவைகுண்டம் "குமரகுருபரன்" பத்திரிகையைச் சாரவைத்தருளியுள்ளார்கள். இந்நூல் உரையினைத் திருமுறைக் கலைஞர் அவர்கள் தெளிவுற எழுதியுள்ளார். தெளிந்த பொழிப்பும், அதன்பின் விளக்கமும் ஒவ்வொரு பாடலின் கீழும் தரப்பெற்றுள்ளன. எளிய நடையில் உரை உள்ளது. சகலகலாவல்லிமாலை ஆங்கிலம், இந்தி, தமிழ் ஆகிய மும்மொழிகளில் இதனுடன் இணைக்கப்பெற்றுள்ளது. இதனைத் தக்கவர்வழி விழுமிய பதிப்பாகக் குறைந்த விலையில் அழகுறவெளியிட்ட ஸ்ரீலஸ்ரீ காசிவாசிசுவாமிகள் அவர்கள் திருவடிகளுக்குச் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

குமாரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீ வைகுண்டம் P. O. திருநெல்வேலிமாவட்டம் என்னும் முகவரியில் இந்நூல் கிடைக்கும்.

—சோ. சிங்காரவேலன் B. A.

உடல் வளர்க்கும் மூலிகைகள்

கடலூர், V. பலராமையா B. A., B. L.,

(மலர் 19, இதழ் 12, பக்கம் 710 இன் தொடர்ச்சி)

துளசி 22.

இதில் மூன்று வகையுண்டு. கருப்பு, ஊதா, பச்சை. பச்சை துளசியையே சாதாரணமாய் நாம் எங்கும் காண்கிறோம். விஷ்ணு ஆலயங்களில் இதை முக்கியமான பூஜைமூலியாக உபயோகிக்கிறார்கள். இம்மூன்று வகைகளில் கருந்துளசி வெகுவிசேஷமானது. ஆனால் அது கிடைப்பதரிதாயிருக்கிறது. ஊதா துளசி சாதாரணமாகக் கிடைக்கும். எந்த துளசியாயிருப்பினும் நல்லதே. இதில் தெய்வாம்சம் நிரம்பியுள்ளது. லக்ஷ்மிமூலியென்றும் இதற்குப்பெயர். இதனுடைய பெருமையை உணர்ந்த நம் பெரியோர்கள் வீட்டின் முத்தத்தில் வைத்துப் பூஜிக்கிறார்கள். ஆனால் அதன் கருத்து நமக்கு அறியாமற் போகவே இக்காலத்தவர்கள் செடியைப் பூஜிப்பது ஓர் குருட்டு நம்பிக்கையென நினைக்கின்றனர். இறந்த உடலையும் பல நாட்கள் நாற்றமில்லாமல் வைத்திருக்கும் சக்திவாய்ந்தது. உயிர் நீங்கும் சமயத்தில் வைஷ்ணவர்கள் துளசிநீர் கொடுப்பதுண்டு. உயிர் நீங்கிய உடலைத் துளசியினால் மூடிவைத்தால் பல நாட்கள் துர்நாற்றமின்றி (Decomposition) பாதுகாக்கும்.

உபயோக முறை :-

பிரதிதினமும் இத்துளசியை ஒரு வெருகடிப்பிரமாணம் ஆகாரத்திற்குமுன் மென்று சாப்பிட்டுக் கொஞ்சம் ஜலம் சாப்பிட வேண்டும். இவ்விதம் எக்காலமும் சாப்பிடலாம். உலர்ந்த துளசியானாலும் நல்லதே. வீடுகளில் தோட்டங்களில் சுலபமாய்ப் பயிர்செய்யக்கூடிய மூலியாதலால் சங்கடப்படவேண்டிய அவசியமில்லை. மேற்சொன்னபடி சாப்பிட்டுவர உடம்பிலிருக்கும்

துர்நாற்றமற்றுவிடும். காலனென்ற கபம் சரீரத்தில் பரவாது. வேகு பலத்தைத் தரும்.

கபத்தாலும், சளியினாலும் அவஸ்தைப்படும் குழந்தைகளுக்கு இம்மூலியை புட்டவியல்போல் வைத்துப் பிழிந்து சுரசமேடுத்து வறுத்த மிளகு ஒன்று (அ) இரண்டு சிடிகைகள் சேர்த்து தேன்விட்டுக் குழைத்து ½ அவுன்ஸிலிருந்து இரண்டு அவுன்ஸ் வரையில் நாள் ஒன்றுக்கு மூன்று வேளைகள் கோடுக்க மறுநாளே கபம் குறைந்துவிடும். சுரமும் குணமாகும்.

காமாலைக்கு இது ஓர் ஆச்சரியமான மூலிகை. இதன் ரசத்தை உச்சித்தலையில் நாள் ஒன்றுக்கு மூன்று முறை தேய்த்து காலை மாலை ஒரு நேல்லிக்காயளவு அரேத்தகல்கத்தை உள்ளுக்கும் கோடுத்து உப்பில்லாப் பத்தியமுமிருப்பின் மூன்று நாட்களில் காமாலை குணமாகும்.

சர்ப்பத் :

துளசி, வில்வ இலை, வேம்பு இலை வகைக்கு 5 பலம் நன்ருய்க் கத்தியால் சிறுக நறுக்கி மட்பாண்டத்திலிட்டு 4 படி ஜலமிட்டு அடுப்பேற்றி ½ படி ஜலமாக வற்றியபிறகு இறக்கிப் பிசைந்து வடிகட்டி, அந்தக் கஷாயத்தை வாணலில் இட்டு ½ வீசை சீனியைக் கலக்கி அடுப்பேற்றிப் பாகுபதம்வந்ததும் இறக்கி ஆறவைத்து சீசாவில் பத்திரப்படுத்துக.

காலை மாலை 2 முதல் 4 தேக்கரண்டியிட்டு ஜலம் விட்டுக் கலக்கி உட்கோள்ளவும். ஒரு மண்டலம் சாப்பிட சரீரத்திலுள்ள துர்நீர் வற்றும். வாதமேறி நீருள்ள சரீரங்களுக்கு இது ஓர் சிறந்த மருந்து. இந்த சர்ப்பத்தை பல வருடங்களாய் முறைசுரத்தில் (Malaria) கஷ்டப்பட்டுக்கோண்டிருந்த ஒருவருக்கு மூன்று மாதங்கள் கோடுத்துப் பூரணகுணம் பெற்றது என் அனுபவம். க்ஷய வியாதியால் அவஸ்தைப்பட்டுக்கோண்டிருந்த 20 வயதுடைய மாணவன் 3 மாதங்கள் கோண்டு சரீரம் பலமடைந்து க்ஷயம் குணமாகிவிட்டது அனுபவம்.

வேம்பு, வில்வம் இவைபற்றிப் பின்னல் எழுதப்பட்டுள்ளது. துளசியின் சுரசத்தைச் சர்ப்பம் தீண்டியவர்களுக்கு ஒரு சோட்டு கண்களுக்கும் வேண்டிய அளவு உச்சித்தலையிலும் தேய்க்க விஷமிறங்கும்.

வைத்தியர்களுக்கு :

துளசி இலையைச் சன்னமாய் அரைத்து ஒரு சாத்துக்குடி அளவு எடுத்து 3 நாட்கள் எலுமிச்சம்பழரசத்தில் ஊறவைத் தேடுத்த பவழம் ½ தோலாவுக்குக் கவசம் செய்து நிழலிலேயே வைத்துப் பிரதிதினமும் 2, 3 முறை அந்தக்கவசத்தைக் கையால் அழுத்தி அழுத்திவிட்டுக்கொண்டுவரவும். இப்படி 3 நாட்கள் செய்யவும். கெட்டிப்பட்ட பிறகு மண்சீலை 7 செய்து சீலை காய்ந்த பக்குவத்தில் எடுத்து 40 வறட்டியில் புடமிடவும். சுண்ணமாகும். இதில் குன்றியளவு திரிகடுகுசூரணம் சேர்த்து தேனிட்டு காலை மாலை கொடுக்க க்ஷயம், சுவாசகாசம், கபம் முதலிய வியாதிகள் குணமாகும். புளி சேர்க்கப்படாது. எலுமிச்சம்பழரசம் சமையலில் சேர்த்துக்கொள்ளலாம். பவழத் திற்குப் புளி சத்துரு கவனிக்கவும்.

குறிப்பு :— கருந்துளசியில் அயத்தாம்பிரசத்தும், மற்ற துளசிகளில் தாம்பிரசத்துமாத்திரம் உள்ளது. (தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

One of the neatly kept temples in south India.

(Sd) C. Thiagarajan,
Tiruvarur.
14—10—60.

I have visited the temple on this day by surprise, It is kept in a neat and tidy manner. The archana and other rites are done in satisfactory manner.

(Sd) C. Gajendran,
Deputy Superintendent of Census Operations-
Tiruchirapalli.
17—10—60.



ஆக்கூர் ஸ்ரீ தான்தோன்றியப்பர் கும்பாபிஷேகவிழாவில்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை ஆக்கூர் பெருமக்களாகிய திரு. இராமலிங்க முதலியார் அவர்களும், திரு. ‘‘கோரம் ஐயர் அவர்களும் வரவேற்றல்

தருமை ஆதீன மடாலயத்தில்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் சென்னைமாநில ஆளுநர்,
ஸ்ரீ விஷ்ணுராம்மேதி அவர்களுக்கு அருளாசி வழங்குதல்

செய்திகள்

* *

தருமையாதீனத்திற்குச் சென்னைமாநில ஆளுநர் வருகை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சென்னை மாநில ஆளுநர் கனம் ஸ்ரீ விஷ்ணுராம்மேதி அவர்கள் 25-11-60 வெள்ளிக்கிழமையன்று மாலை 4-30 மணிக்கு வருகைபுரிந்தார்கள். தருமையாதீனத் திருவீதிகள் எல்லாம் தோரணங்களாலும் ஆளுநர் அவர்களை வரவேற்கும் வளைவுகளாலும் ஒப்பனை செய்யப்பட்டிருந்தன. தஞ்சைமாவட்டத் தண்டல்நாயகம். திரு. சந்திரசேகரன் I. A. S. அவர்களும் ஆளுநர் அவர்களுடன் வந்தார்கள். ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை ஆலயத் திருமுன்னர் ஆளுநர் அவர்களுக்குப் பூர்ணகும்ப மரியாதையுடன் ஆதீனச் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆளுநர் அவர்கள் ஸ்ரீ மகாலக்ஷ்மிதுர்க்காம்பிகையை வழிபட்டுக் காணிக்கையும் செலுத்தினார்கள். ஸ்ரீமகாலக்ஷ்மி துர்க்காம்பிகையும் அன்று சந்தனக்காப்பு அலங்காரத்தோடு விளங்கி அருள்பாலித்தாள்.

ஆதீன மடாலய முகப்பிற்கு வந்தபோது மாலை சூட்டி வரவேற்பு அளிக்கப்பட்டது. கனம் ஸ்ரீ விஷ்ணுராம்மேதி அவர்கள் ஆதீன நூல்நிலையத்தைப் பார்வையிட்டபின், ஆதீனத்தின் ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபட்டுருகினார்கள். கனம் ஸ்ரீ விஷ்ணுராம்மேதி அவர்களை ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை ஆலயத்திலும், ஆதீன மடாலய முகப்பிலும் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாலை சூட்டி வரவேற்றார்கள். ஆதீனம் சீப்சூப்பிரண்டேண்டேண்ட் திரு. B. முத்துக்குமரசாமி முதலியார் அவர்களும், ஆதீனம் மானேஜர் முதலிய ஆதீனம் அலுவலர்களும் இருந்து வரவேற்றனர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்னர்ப் பழம் முதலியன கொணர்ந்துவைத்துப் பாதகாணிக்கை செலுத்தி வணங்கி முறைப்படி தரிசித்தார்கள்.

ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில்

ஆளுநர் அவர்களுக்கு வரவேற்பு

திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் சென்னை மாநில ஆளுநர் ஸ்ரீ விஷ்ணுராம்மேதி அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆதீனத் தேவார பாடசாலை மாணவர்கள் கடவுள் வணக்கம் பாடினர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மன்றத்திற்கு எழுந்தருளி அருளாசி வழங்கினார்கள். பின்னர் ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் '' செஞ்சோற்கொண்டல் '' வித்துவான். திரு. சோ. சிங்காரவேலன் B. A., அவர்கள் வரவேற்புரை வாசித்தளித்தார்கள். பின்னர் ஆளுநர் அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். தருமை ஆதீனம், சென்னை சமயப் பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றி நவின்றார்கள். ஆதீனக் கல்வி நிலைய மாணவிகள் தேசீய கீதம் பாடிய பின்னர் கூட்டம் இனிது நிறைவெய்தியது. விழாவிற்குப் பெருமக்கள் பலர் திரளாக வந்து சிறப்பித்தார்கள்.

திருக்கடையூரில் 1008 சங்காபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் கார்த்திகைச் சோமவாரங்களில் நிகழும் 1008 சங்காபிஷேகம் ஸ்ரீ அமிர்தகடேசுவரப்பெருமானுக்கு ஒவ்வொரு சோமவார நாட்களிலும் சிறப்பாக நடைபெறுகிறது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம்

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம் 6—11—60 காலை திருப்பனங்காடு என

வழங்கும் திருவன்பார்த்தான்பனங்காட்டூரிலும், மாலை திருஒத்தூரிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது. வாலாஜாபாத் இந்துமத பாடசாலைத் தலைவர் டி. மாணிக்கஞ் செட்டியார், வா. தி. மாசிலாமணி முதலியார், தணிகையரசு, சென்னை மேயர் கம்பேனி ஆர். மாசிலாமணி முதலியார், காண்ட்ராக்ட் மாசிலாமணிமுதலியார், கயப்பாக்கம் சோமசுந்தரஞ்செட்டியார், சிவகுமாரன், டைரக்டர் சோமு முதலியோரும், இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜனசபை, இராயபுரம் இறைபணிக் கழகம், சைவசித்தாந்த மகாசமாஜம், புரசைத் திருநேறிக் கழகம் முதலிய கழகத்தினரும் வழிபாட்டில் கலந்துகொண்டனர். திருவன்பார்த்தான்பனங்காட்டூரில் திருமுறைச் செல்வர், சேலம் திரு கி. சுப்பராயப் பிள்ளை, காஞ்சிபுரம் துணைப் பதிவாளர் திரு. ந. பெரியண்ணன் இவர்களது பெருமுயற்சியால் பக்கத்தில் உள்ள கிராமங்களிலிருந்து 5000க்கு மேற்பட்ட பொதுமக்கள் வழிபாட்டில் கலந்துகொண்டனர். 12க்கு மேற்பட்ட பஜனை கோஷ்டிகளும், தேவார கோஷ்டிகளும் வழிபாட்டில் கலந்துகொண்டன. வழிபாட்டுக் குழுவினரை சேலம் சுப்பராயப் பிள்ளை, ந. பெரியண்ணன் இவர்கள் தலைமையில் ஊர்ப் பொதுமக்களும் தேவஸ்தான அறங்காவலர் சார்பில் திரு. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களும் பூர்ணகும்ப மரியாதையுடன் மேளவாத்தியம் முழங்க வரவேற்றனர். வழிபாட்டுக் குழுவினர் சிவபுராணம் ஓதிக்கொண்டு மாடவீதியை வலம் வந்து திருக்கோயிலில் வழிபாடு நிகழ்த்தினர். கோயில் சந்நிதியில் நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர், சங்கீதபூஷணம் திரு. பி. சுவாமிநாதன் ஸ்தலத் தேவாரப் பதிகத்தினைப் பக்திச் சுவை ததும்ப ஓதினர். வழிபாட்டின் பின்னர் கோயில் முன் மண்டபத்தில் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

திரு. சிவகுமாரன் சமயப் பிரசார நிலையத்தின் லட்சியத்தையும், வழிபாட்டின் அவசியத்தையும்பற்றிப்பேசினர். 81 வயதில் கால் எலும்பு முறிந்து திருமாகறல் தேவார பாராயணத்தால் ஒன்று சேர்ந்து நலமாக விளங்கும் 92 வயதான சேலம் திரு. சுப்பராயப் பிள்ளை தேவார திருமுறையால் தாம் அடைந்த அனுபவ நலன்களை விளக்கி மாதந்தோறும் இப்படிப் பாடல் பெற்ற தலங்கட்குச் சென்றுவரும் தொண்டினைப் பாராட்டினர். நிலையத் தலைவர் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

இம்மாதாந்தர வழிபாட்டினுல் ஆண்டவன் அருளைப் பெறுவ தோடு, பல நல்லன்பர்களுடைய தொடர்பும் ஏற்படுகின்றன என்றும், சத்சங்கத் தொடர்பால்தான் மக்கள் வாழ்வு உயர முடியும் என்றும், பெரியண்ணன், சுப்பராயப்பிள்ளை போன்ற தொண்டர்களை இன்று காண்பதால் எல்லோருக்கும் தொண்டு மனப்பான்மைவளரமுடியும் என்றும், இப்பனங்காட்டூர்க்கோயிலை முன்பின் பார்த்திராத திரு. ஏகப்பச் செட்டியார் தமது பிள்ளைகள் மூலம் இரண்டரை லக்ஷம் செலவில் திருப்பணி செய்துள்ளார் என்பதை எண்ணும்போது இம்மாதிரியான நல்ல திருப்பணி கட்கு மக்களை ஆற்றுப்படுத்த இம்மாதாந்தர வழிபாடு பெரிதும் பயன்படும் என்றும் குறிப்பிட்டார்கள். ஆண்டுதோறும் இவ் வழிபாட்டின் நினைவாக நவம்பர் 6ந்தேதியன்று வழிபாடு இத் திருக்கோயிலில் நடைபெற ஏற்பாடு செய்வதாக ஊர்ப் பொதுமக்கள் அறிவித்தனர். இத்தல வழிபாட்டில் சேலம் சுப்பராயப் பிள்ளையும், ந. பெரியண்ணனும் செய்த தொண்டு குறிப்பிடத்தக்கது.

மாலை திருவோத்தூரில் ஊர்ப் பொதுமக்களும் திருக் கோயில் அறங்காவலரும் பூர்ணகும்ப மரியாதையுடன் வழி பாட்டுக் குழுவினரை வரவேற்றனர். குழுவினர் சிவபுராணம். திருத்தொண்டத்தொகை ஓதிக்கொண்டே திருவீதிகளையும், மாடவீதிகளையும் வலம்வந்தனர். திருக்கோயில் வழிபாட்டினைப் பொதுமக்களும், அறங்காவலரும் சிறப்பாகச் செய்துவைத் தனர். சுவாமி சந்நிதியில் அவ்வூர் தேவாரப் பதிகத்தினையும் மற்ற சந்நிதிகளில் பக்திப் பாடல்களையும் நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் பி. சுவாமிநாதன் இசையுடன் ஓதி எல்லோரை யும் இறைவழிபாட்டில் ஈடுபடச் செய்தார். பிறகு நூற்றுக்கால் மண்டபத்தில் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப் பிரசாரக் கூட்டம் நடை பெற்றது. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கம் பாடினுர். திரு. சிவகுமாரன் சென்னையிலிருந்து வந்துள்ள அன்பர்களை ஊர்மக்கட்கு அறிமுகம் செய்துவைத்தார். கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் விபூதியின் பெருமைபற்றிப் பேசினுர். சப்-ரிஜிஸ்தரார் திரு. ந. பெரியண்ணன் வழிபாட்டு முறை என்பதுபற்றிப் பேசினுர். ஸ்ரீமத். சுவாமிகள் தமது தலைமையுரை யில் சைவம் அன்பை அடிப்படையாகக் கொண்டது என்றும்,

எவ்வுயிரும் தன்னுயிர்போல்எண்ணி இரங்கக்கற்றுக்கொடுப்பது சைவம் என்றும், சைவ சமயத்தில் வழிபாடு மிகவும் முக்கிய மாகக் கருதப்படுவது என்றும், வழிபாடு மனிதனை மனிதனுக்கி அதற்குமேல் தேவனுகவும் ஆக்கவல்லது என்றும், இவ் வழிபாட்டை நமது சமயாசாரியர்கள் நால்வரும் வற்புறுத்தி நடந்து காட்டியுள்ளார்கள் என்றும், இத்திருவோத்தூர் கோயி லுக்கு நந்தவனமும், நிலங்களும் அக்காலத்தில் போது மக்களாலும் சிற்றரசர்களாலும் கொடுக்கப்பட்டிருப்பது கல் வெட்டுக்களால் அறியப்படுகின்றன என்றும், இவற்ருல் அக் கால மக்கள் நிலையும், மன்னர் நிலையும் நமக்குப் புலனுகின்றன என்றும் குறிப்பிட்டார்கள்.

தேவஸ்தான அறங்காவலர் வரவேற்புரை கூறினுர். சிவகுமாரன் அனைவர்க்கும் நன்றி தெரிவித்து அடுத்த மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையை ஒட்டி அண்ணுமலைதீபம் வருவ தால் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை 11—12—60 அன்று காலை திருக்காளத்தியில் வழிபாடு நடைபெறும் என்று அறிவித் தார். திருப்பனங்காட்டூரில் திரு. சுப்பராயப் பிள்ளை தலைமை யில் ஊர்ப் போதுமக்களால் காலை சிற்றுண்டியும் நடுப்பகல் மாகேசுவரபூஜையும் செய்துவைக்கப்பெற்றன. திருவோத்தூரில் சென்னை மேயர் கம்பேனி ஆர். மாசிலாமணி முதலியார் மாலை சிற்றுண்டி செய்துவைத்து உபசரித்தார்.

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகம்

மாயூரம், தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழி பாட்டுக் கழகத்தாரின் வார வழிபாடும் கூட்டமும் 13—11—60 ஞாயிற்றுக்கிழமையன்று திருஆக்கூர் ஸ்ரீ தான்தோன்றியீசுவர சுவாமி திருக்கோயிலிலும், 20—11—60 ஞாயிற்றுக்கிழமை யன்று தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலி லும், 27—11—60 ஞாயிற்றுக்கிழமையன்று தருமையாதீனத் திற்குச் சொந்தமான கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீ சுவரசுவாமி திருக்கோயிலிலும், 4—12—60 ஞாயிற்றுக்கிழமை யன்று தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்த வேதீசுவரசுவாமி திருக்கோயிலிலும் நிகழ்ந்தன.

எதிர்காலம் ☞	கே. முத்துஜோதிடர்

(சார்வரிஸு மார்கழிமீ 1உ முதல் 30உ முடிய)

(15—12—60 முதல் 13—1—61 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி நான்கு பாதங்களும், பரணி முதற்பாதமும் சுபமாகும். கிரக சுகம், ஆடையாபரண சேர்க்கை ஏற்படும். பரணி 2, 3, 4 பாதங்களும் கார்த்திகை முதற் பாதமும் மிச்ர பலனைத் தரும். வீண் அலைச்சல், அபவாதங்கள், ரோகபீடை, சத்ருபயம் இவைகளைத் தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

விருஷபராசி 9 பாதங்களும் நன்மையிராது. ஈதிபாதைகளையும், நஷ்டங்களையும் உண்டுபண்ணும். செய்காரியங்கள் ஒன்றும் நற்பலனைத் தராது. எதுவும் தடைபடும். புதன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் சுபபலனைத் தரும். வம்ச விருத்தியாகும். நஷ்டமான போருள் வந்துசேரும். திருவாதிரை 4 பாதங்களும், புனர்பூசம் 3 பாதங்களும் சுபமிராது. கவலையையும், வீண் செலவுகளையும், ஈதிபாதைகளையும், குடும்பத் தொல்லைகளையும் உண்டுபண்ணும். மனம் நிம்மதியிராது. சனி, செவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் சுபசந்தோஷங்களைத் தரும். நூதன தொழில்முறை ஏற்படச்செய்யும். நல்லோர், பெரியோர் அன்பு கிட்டும். உத்தியோக உயர்வும், கீர்த்தியும் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் 4 பாதங்களும் உத்தியோக உயர்வைத் தரும். வியாபாரம் ஓங்கும். தூரத்திலிருந்து பிரிய சமாசாரம் வரும். பூரம் 4 பாதங்களும், உத்திரம் முதற் பாதமும் மிச்ரமாய் நடக்கும். காரியங்கள் தடைபடும். விவசாயத்தில் நஷ்டமுண்டு பண்ணும். வீண் செலவுகளும், மனக்கவலையும் ஏற்படச் செய்யும். புதன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் சகல சுபத்தையும் தரும். தெய்வீகத்தன்மை வளரும். தொழில் ஓங்கும். சத்துருக்களை சரண் அடையச்செய்யும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் சுபமாகும். வியாதி நீங்கும். கடன் நிவர்த்தியாகும். தெய்வீகத்தன்மை பிரகாசிக்கும். சகல சிரமங்களும் தானாக விலகும். புதன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் 2, 3, 4 பாதங்கள் சுபமிராது. தொழில் மாறும். நஷ்ட கஷ்டங்கள் ஏற்படச்செய்யும். அனுஷம் 4 பாதங்களும், கேட்டை 4 பாதங்களும் சகல சுபத்தையும் தந்து தோல்விகளையும் அதிகமாக்கும். கிரகசுகம் ஓங்கும். கிரய விக்கிரயங்கள் ஏற்படச்செய்யும். புதன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் 4 பாதங்களும் பலவித சிரமங்களையும் கவலையையும் உண்டுபண்ணும். பூராடம் 4 பாதங்களும் சிறு நஷ்டங்களையும் காரிய விக்னங்களையும் ஈதிபாதைகளையும் தரும். உத்திராடம் முதல்பாதம் ஆரோக்கியத்தைத்தரும். பந்துமித்ராதிகளால் கொண்டாடும் தன்மையை உண்டுபண்ணும். தெய்வ பலம் முன்னின்று காக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் அதிக உழைப்பைத்தந்து சுபத்தைத்தரும். இல்லறம் ஓங்கும். திருவோணம் 4 பாதங்களும் உத்தியோக உயர்வையும், கீர்த்திபத்திரம் கிடைக்கச் செய்தலும், உலகப் பிரசித்தியும் உண்டுபண்ணும். வம்ச விருத்தியும் சுபசந்தோஷங்களும் உண்டாகும். அவிட்டம் 1. 2 பாதங்கள் சதா மனசஞ்சலத்தைத்தரும். அதிகச் செலவினங்கள் உண்டாக்கும். குடும்பத்தொல்லை அதிகமாகும். ஆனாலும் உத்தியோக உயர்வும், மேல் பதவிகளும் கிடைக்கச்செய்யும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் எதிர்பாராத நன்மைகளையும் லாபங்களையும் தரும். சகல கவலைகளும் நீங்கும். சதா தெய்வ சிந்தனையாகவே இருக்கச்செய்யும். தூரப்பிரயாணம் கிட்டும். புதன் வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9பாதங்களும் நன்மையைத்தரும். கஷ்டங்கள் விலகும். உத்தியோக உயர்வு ஏற்படச்செய்யும். நஷ்டமானபொருள் வந்துசேரும். தொழில் ஓங்கும். இல்லற சுகம் ஏற்படும். தெய்வீகத்தன்மை பிரகாசிக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :— மார்கழிமாதம் விவசாயிகளுக்குக் கவலையைக் காட்டும். அடிக்கடி ஈதியாதைகள் உண்டாகும். தென்னாடு சுபிக்ஷமடையும். ஆனாலும் தனதான்யங்களுக்குக் குறைவு காட்டும். மேற்படிமாதம்முதலே பிலவவருஷம் பங்குனிமாதம் முடிய உத்பாதக்கிரகங்களின் ஆளுகையால் உலகத்தில் பல மாறுதல்களும் மகாஜனங்களின் மனம் மாறுதலும் உண்டாகும். இது ஒரு தோஷகாலமாகும். சாதுக்களும், சத்ஜனங்களும், ஆஸ்தீக பிரமுகர்களும், தர்மிஷ்டர்களும், விசேஷ கனதனவான்களும் இதுமுதலே தன் ஆத்மார்த்தத்தைமாத்திரம் கவனித்துக் கொள்ளாமல் உலக க்ஷேமத்தின் பொருட்டு ஆங்காங்குள்ள சிவ வைஷ்ணவ ஆலயங்களிலும், மகாநதிதீரங்களிலும் மகா யக்யங்களையும் லக்ஷம் கோடி அர்ச்சனைகளையும் தீபங்களையும் செய்துகொண்டு நாஸ்தீகத்தை வேருடன் அறுக்க முன்வந்து பாடுபடவேண்டும். கடவுள் காப்பார். உலகம் சுபிக்ஷமடையும்.

உ

SIVA SIVA

Sri Kailai Subrahmanya Desika Swamigal High School Endowment at Tirupanandal.

LANDED PROPERTY WORTH Rs 1,00,000

(Rs. ONE LAKH)

DEED OF TRUST SETTLEMENT dated the 30th day of November 1960 executed by His Holiness Srilasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Head of Sri Kasimutt, Tirupanandal in favour of the Managing Committee formed to manage the Sri Kailai Subrahmanya Desika Swamigal High School at Tirupanandal in Kumbakonam Taluk, to commemorate the Holy pilgrimage to Mount KAILAS by His Holiness Srilasri Subrahmanya Desika Gnanasambanda Paramacharya Swamigal Avergal, Mahasannithanam of Dharmapura Athinam, Dharmapuram, Mayuram.

2. It has been proposed by the above said Committee to open in June 1961 a High School at Tirupanandal in the hallowed name of Srilasri Subrahmanya Desika Gnanasambanda Paramacharya Swamigal Avergal the 25th in the line of succession to the gadi of the Dharmapuram Athinam, who is well versed in Tamil and Sanskrit, a Philosopher, orator and patron of Oriental Learning, who is a good administrator of 28 temples which have earnt the fame of being model shrines in the Tamil Nad, who had visited the Himalayan shrines as Pasupathinath, Amarnath, Kedarnath, Badrinath etc., who propagated the knowledge and tenets

of Tirukkural to the Tamils by publishing the Tirukkural Variorum, who is spreading the knowledge of the Saiva tenets and Tirumurais by innumerable and voluminous publications serving the needs of the Saivites and who, above all, very successfully returned after the pilgrimage to Mount Kailas having had Darsan of Kailasanath to the great admiration and adoration of all his disciples throughout the Tamil Nad and who has thenceforth become popularly known as the Kailai Mahasannithanam of the Dharmapura Athinam, AND the property detailed in the Schedule hereto attached consisting of Acres 87-29 (Eightyseven acres, twentynine cents) of both wet and dry lands in Kattaveli village of 28 Kizha Suriamoolai Vattam and Inam Sivapurani village Kumbakonam Taluk, Thanjavur District, in the sole enjoyment of His Holiness Srilasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal and with patta standing in his name, has been set apart to give contribution every year to the Kailai Subrahmanya Desika Swamigal High School to be opened at Tirupanandal.

3. The entire amount of annual income from the property excluding the charges thereon (viz. dues to Government, Village and Office establishment charges, Village Samuthayam and maramath expenses) shall be placed every year at the disposal of the Committee managing the Sri Kailai Subrahmanya Desika Swamigal High School at Tirupanandal which shall utilise the money for the purpose of running the High School at Tirupanandal. The contribution amount (viz. the net income) may vary each year according to the income derived.

4. This endoment is made subject to the following conditions:—

(a) The name of the High School at Tirupanadal Shall always be the "SRI KAILAI SUBRAHMANYA DESIKA SWAMIGAL HIGH SCHOOL, TIRUPANANDAL."

(b) The Principal of Srilasri Kasivasi Swaminatha Swamigal Sentamil Kalloori, Tirupanandal and a representative of the Dharmapuram Athinam nominated by His Holiness Srilasri Kailai Subrahmanya Desika Gnanasambanda Paramacharya Swamigal Avergal, Head of the Dharmapuram Athinam and his successors in interest, shall be-officio members of the Managing Committee of the Sri Kalai Subrahmanya Desika Swamigal High School at Tirupanandal.

(c) The Headmaster of the said High School shall be appointed in consultation with the Donor and his successors in interest and with his approval as and when he should be appointed.

(d) The financial statement of the High School shall annually be sent to the Donor and his successors in interest.

5. (a) If at any time any of the conditions mentioned in paragraph 4 above are not fulfilled, the Donor or his successors in interest shall have the right to stop sending the contribution for that particular year or year as the case may be and utilise the amount for such educational purposes as would be deemed fit by the Donor or his successors in interest.

(b) If at any time the Donor or his successors in interest or the Mahasannithanam of the Dharmapuram Athinam or his successors in interest withdraws the membership of (1) the Principal of the Tamil College, Tirupanandal and (2) the representative of the Dharmapuram Athinam of their own accord or if these two

members themselves tender resignation of the membership of their own accord, the Donor or his successors in interest and the Mahasannithanam or his successors in interest shall appoint another in the vacancy created.

(c) The Principal of the Tamil College at Tirupanandal viz. the Donor's representative in the High School Committee may accept with the permission of the Donor or his successors in interest any post in the Managing Committee without any hindrance to his normal duties assigned to his post as the Principal of the Tamil College, Tirupanandal, if the rules of the Educational department should permit.

6. The net income from the endowed property shall be sent every year to the President, Managing Committee of the Sri Kailai Subrahmanya Desika Swamigal High School, Tirupanandal and the President of the said Managing Committee shall properly invest the amount and make it available for the High School.

7. If the annual net income of the property is not placed at the disposal of the said committee as said in the previous paragraph by the Donor or his successors in interest, although all conditions mentioned in paragraph 4 above are fulfilled, the Committee managing the Sri Kailai Subrahmanya Desika Swamigal High School at Tirupanandal shall have power to claim the net income only from the property shown in the Schedule attached hereto.

8. From the contribution amount received each year, four prizes in the name of Sri Kumaragurupara Swamigal shall be awarded in the said High School on the following terms :-

(a) The prizes shall be called "SRI KUMARA-
* GURUPARA SWAMIGAL NEETHINERIVILAKKAM PRIZE at the Sri Kailai Subrahmanya Desika Swamigal High School at Tirupanandal"

(b) The prizes shall be awarded irrespective of sex, caste or religion.

(c) Pupils studying in the 9th and 10th standards of this High School are eligible to compete for the prizes.

(d) Applications for the prizes from the candidates shall be entertained by the Headmaster from the pupils before the 15th July each year and the oral and written tests shall be conducted in the first week of December each year.

(e) The portion for each year shall be 50 stanzas in Neethinerivilakkam - odd numbered stanzas in the odd mumbered years and even numbered stanzas in the even numbered years. The competitors shall memorise all the fifty stanzas and should know the purport af each stanza.

(f) Four prizes of Rs. 80, Rs. 70, Rs. 60 and Rs. 40 totalling Rs. 250 shall be awarded each year to the first four candidates who come out successful in the final test (oral 50 marks and written 50 marks) to be conducted by a Board of Examiners consisting of the Headmaster and the Senior Tamil Pandit of the High School and a lecturer in Tamil of the Tamil College at Tirupanandal. The decision of the examining body shall be final.

(g) If in any year or years the competition is not conducted or the prizes are not awarded, the amount of Rs. 250/- earmarked for the award of prizes shall be sent by the President of Sri Kailai Subrahmanya Desika Swamigal High School committee, Tirupanandal to the President of the Sri Kumaragurupara Swamigal High School committee, Aduthurai for purchase of Tamil books to the Library of that High School and the said President shall buy books accordingly and add them to the Library and submit a report to the Donor and his successors in interest.

9. (a) If the proposed High School is not opened at Tirupanandal in June 1961, the net income from the property shall be earmarked for the said High School and invested in Government Securities by the Donor and such accumulations will be handed over to the management as soon as it opens the High School.

(b) The managing Committee shall not postpone opening the High School at Tirupanandal indefinitely and the High School shall be opened in June 1963 at the latest. If the High School is not opened within the time specified herein, the Donor shall have power to divert the yearly contribution and the accumulations to any other High School in the name of Sri Kumaragurupara Swamigal on the terms to be specified by the Donor.

10. The said income from the property shall not be diverted to any other purpose than those mentioned herein above.

11. The value of the property is Rs. One Lakh and the present estimated annual income is Rs. 5000.

SCHEDULE

Particulars of land in Inam Sivapurani Village, Kumbakonam Taluk, attached to Tanjore District Registration and Tiruvidaimarudhur Sub-Registration.

S. No.	Survey No.	Wet or Dry.	Extent Acre	Cents
1	358-	Wet	4	70
2	359-	"	4	76
3	360-	"	2	85
4	361-	"	5	11
5	362-	"	4	86
6	363-1 A	"	4	44
7	364-	"	2	07
8	365-	"	3	75
9	366-1 A	"	3	48
10	367-1	"	6	33
11	368-2	"	5	50
12	369-	"	2	06
13	370-	"	5	46
14	371-	"	5	88
15	372-	"	6	26
16	374-	"	5	26
17	373-	"	3	92
18	375-	"	3	58
19	376-1	"	4	05
		Total Wet	84	32
20	357-	- Dry	1	37
21	377-2	do	0	17
		Total Dry	1	54
Total Wet and Dry in Inam Sivapurani			85	86

Particulars of Land in 28 Kizha Suriamoolai vattam, Kumbakonam Taluk attached to Tanjore District Registration and Tiruvidaimarudhur Sub-Registration.

S. No.	Survey No.	Wet or Dry	Extent Acre	cents.
		Kattaveli Village		
22	114-2 A	Wet	1	35
23	134-4 A	Dry	0	08
Total wet and dry in 28 Kizha Suriamoolai			1	43

Total wet and dry lands in Inam Sivapurani and 28 Kizha Suriamoolai vattam Acres 87 Cents 29 including trees etc.

Tirupanandal
Dated: 30—11—1960 } (Sd.) KASIVASI ARULNANDI TAMBIRAN.

Registered at Tiruvidaimarudhur Sub-Registrar's Office on 30—11—60 as No. 3265 of 1960 of Book 1, Volume 1130, Pages 323 to 327.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

I had the great privilege of worshipping the Lord in this temple. All gratitude to the management who made it possible. Let God's Grace abide.

Sd. S. Thirumal,
District Revenue Officer, Thanjavoor.
18—10—60.